அமிர்தவசனி

மாதப்பத்திரிகை

24

Page - No -1-

மலர் : 17	விசுவாவசு ஹூ சித்திரை மீ	வருட சந்தா
இதழ் : 1	ஏப்ரல்–மே மீ 1965	ரூ. 3–00

18585



ACC NO 18585

போரில் தர்மம் தணிந்த சுந்தரேசர்

சித்திர விளக்கம் 36 பக்கம் 5

2

பொருள் அடக்கம்

		பக்கம்
1.	சரணானுபவமும், ப்ரம்மானுபவமே (திருப்புகழ்மணி) ...	1
2.	தண்ணீர்ப்பந்தல் வைத்தது (கி. வா. ஜகந்நாதன்) ...	5
3.	'தரையினில்' திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ...	9
4.	சண்முக கவச விளக்கம் (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.) ...	17
5.	மேலான லட்சியன் (கி. வா. ஜ.) ...	20
6.	பிராந்த பாக்கர் (ரஸபதி) ...	24
7.	அருணகிரிநாத சுவாமிகள் (தணிகைமணி வ. சு. செங்கல்வராயபிள்ளை, M.A.)	36
8.	வாழும் காலம் வரும் (அன்பன்) ...	41
9.	Visvavasu and the Unfailing torch (*Thiruppugal Mani*) ...	46

Grams: MURSOKS Phone: 51388

''பதமலர் உளத்தில நாளும் நினைவுறு கருத்தர் தாங்கள்,
பணியவும் எனக்கு ஞானம் அருள்வாயே! ''

வெண்மையான சலவைக்கு

ஒயிட் ஹார்ஸ் சோப்

தயாரிப்பாளர் : D. பூங்காத செட்டியார்,
நேஷனல் இண்டஸ்ட்ரீஸ்,
220, T. H. ரோடு, தண்டையார்பேட்டை, சென்னை-21

அமிர்தவசனி
தெய்வீக மாதப் பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : சு. முத்துஸ்வாமி 18585

மலர் 17	விசுவாவசு ஹூ சித்திரை மீ ஏப்ரல்—மே 1965	இதழ் 1

சரணானுபவமும், ப்ருமமானுபவமே

(திருப்புகழ்மணி)

தெய்வம் நித்தியம். சரீரம் ஜடத்தினால் கட்டப்பட்டது. இதில் உள்புகுந்து வசிக்கும் பிரம்மத்தையே சிவன் விஷ்ணு என்ற பல நாமங்களால் கூறுகின்றனர். பிரம்மத்தை உள்ளத்தில் இருத்தி வைப்பதனால் அவனுக்கு இறைவன் என்ற பெயருண்டாயிற்று. அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்றும் உலக மக்கள் அடைய வேண்டிய பேறுகள் என்று மேலோர் கூறுகின்றனர். அதற்கும் மேலான இன்பமொன்றுண்டு. அதுவே பேரின்பமாகிய மோக்ஷம் அல்லது வீடு. இருவினைகளினால் வரும் இன்ப துன்பங்களிலிருந்து நீங்கினவர் வீடாகிய பேரின்பத்தையடைவர்.

விசுவா வசுவின் விநயம் மிகுந்து
விசுவாசம் பல்க விமலா அருளுதியே!

" இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

என்றார் திருவள்ளுவர்.

இருவினைகளும் இருளாகிய மயக்கத்தைத் தருவனவாம். இறைவனைப் புகழ்ந்து துதிப்பவர் இருவினைகளால் வரும் துன்பத்தில் சேர மாட்டார்கள். அதாவது இருவினைப் பயன்கள் அவர்களை ஒட்டாவாம்.

வாயினால் பாடி மனத்தினால் நினைத்தால் இதயமாகிய தாமரையில் அவன் குடிபுகுந்து விடுகிறான். அவனிருக்குமிடத்தில் என்றும் பேரின்பமே யன்றி, கீழான இன்ப துன்பங்கள் ஒட்டாமலகன்று விடும்.

" விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள், [மெய்ம்மைகுன்று
மொழிக்குத் துணை முருகாவெனும் நாமங்கள், முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும், பயந்ததனி
வழிகுத துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே."

என்றார் அருணகிரியார்.

இகத்திலும், பரத்திலும் சுகமாக வாழும் வழி இறைவனுடைய பாதார விந்தத்தை நினைப்பதே. வேதம், புராணம், பெரியாருடைய அனுபவம் முதலியவை பகவானுடைய பாதார விந்தத்திலேயே அடங்கி யிருக்கின்றன.

ஆயிரம் வருஷங்களுக்கு முன்னிருந்த திருவள்ளுவர் இறைவனடியைப் பற்றிக் கூறியதை அருணகிரியார் கந்தரலங்காரத்தில் கூறி யிருக்கிறார்.

வசையும் அருவறுப்பும் பினவாங்க, வாழும்
நிசமும் ஒழுக்கமும், நின்மலநீ நல்காயே!

"தொண்டர் கண்டு அண்டி மொண்டு" விடாமல் உண்டு கொண்டிருப்பது ஆண்டவன் பாதம். அது சுத்த ஞானமே வடிவானது; அதில் அருள் வெள்ளமும், ஆனந்த வெள்ளமும் நிறைந்து கரை புரண்டோடிக் கொண்டிருக்கின்றனவாம்.

தொண்டர்கள் ஆண்டவனுடைய தத்துவத்தை ஒரு ரூபத்தில் வைத்துப் பாடி யிருக்கிறார்கள். நாம் அந்தத் தத்துவத்தைப் பார்க்க வேண்டுமே யன்றி, ரூபத்தைப் பார்க்கக் கூடாது. ஆண்டவன் தன் கருணை வெள்ளத்தைப் பெரிய மகான்களின் மூலமாக அப்போதைக் கப்போது ப்ரிமாறிக் கொண்டே யிருக்கிறான்.

முருகன் ஜீவராசிகள் தன் தாளை யடைந்து பிரம்மானந்தமா யிருக்கவேண்டு மென்றே அருணகிரி யாரின் மூலமாகத் திருப்புகழை வெளிப்படுத்தி யிருக் கிறான். ஆறு முகமான ஆனந்த ரூபத்தைத் திருப் புகழில் வைத்துப் பாடி யிருக்கிறார் அருணகிரியார். ஆறுமுக ரூபம் வேறல்ல; அதன் தத்துவம் வேறல்ல. உயிரும் உடலும் போல இரண்டும் ஒன்றாய்க் கலந் திருக்கின்றன. அவன் தாளைப் பற்றினால் வினை நீங்கும்.

ஆண்டவன் திருவடி எங்கும் நிறைந்ததாயிற்றே; நமக்கு அகப்படாதே. அதை எப்படிப் பற்றுவது என்று எண்ண வேண்டாம். அடியார் வேறல்ல; ஆறுமுகன் வேறல்ல. அடியார் தாளை வணங்கினால், ஆறுமுகன் அகப்பட்டு விடுவான்.

புகழ்ச்சி கருதிப புரளாமல், வாய்மை
மகிழ்ச்சி பெருக, வரதா! அருளுதியே.

ஒரு பெரியார் கணபதியைப் பார்த்தார். கண பதி! நீ யாரென்று அறிந்தேன். "நித்யானந்தமாகி, நிஷ்கள சொரூபமாகி, சத்தியாய்ச் சிவமுமாகித், தாணுவாய் உலகுக் கெல்லாம், சித்தியாய் முக்தி யாகித், திகழ் பரமார்த்தமாகி, அத்தியின் உருவமான அண்ணல் நீ தான்" என்றார்.

விநாயகக் கடவுள் பிரமத்தின் சொரூபம். பிரம்மம் எப்படியிருக்குமென்று சொல்ல முடியாது. பிரம்மத்தைப் பார்த்த அறிவு அதில் கலந்து விடு கிறது. பிரம்மத்தைக் கண்ட மனிதன் தன் சொந்த அறிவையும் மனத்தையும் இழந்து விடுகிறன். கற் கண்டு நீரில் கரைந்து விடுவது போல, அறிவும் மனமும் ஆண்டவனுடைய அருளிலும் ஆனந்தத் திலும் கரைந்து விடுகின்றன.

ஆண்டவனுடைய அருளில் மனத்தைக் கரைத்து விட்டால், அங்கே தோன்றும் பேரின்பச் சுவையின் முன் மற்றச் சுவைகளெல்லாம் புளித்து விடுகின்றன.

"பெரும்பைம் புனத்தினில் சிற்றேனல் காக்கின்ற
பேதைகொங்கை
விரும்பும் குமரனை, மெய்யன்பினால் மெல்லமெல்ல வுள்ள
அரும்பும் தனிப்பரமானந்தம், தித்தித்தறிந்த வன்றே
கரும்பும் துவர்த்துச் செந்தேனும் புளிததறக் கைத்ததுவே"

என்று கந்தரலங்காரத்தில் குறிப்பிட்டுள்ளார் அருண கிரியார்.

மனசாட்சி மாய, மதியாட்சி சாய,
இனஆட்சி தேய, இருக்கின்ற(து) இன்றுலகே!

ஆண்டவனுடன் கலந்து ஆனந்த மடைவதற்கு அவனை நினைந்து அவன் நாமத்தைப் பாடவேண்டும். அவனடியார்களை அவனுகவே நினைத்துப் போற்ற வேண்டும்.

முருகா சரணம் முருகா சரணம்
முருகா சரணம் முருகா முருகா.

சித்திர விளக்கம் 36

தண்ணீர்ப்பந்தல் வைத்தது

[கி. வா. ஜகந்நாதன்.]

இராசேந்திர பாண்டியன் அரசாட்சி புரிந்து வந்த நாளில் காடு வெட்டி சோழன் வெளிப்படையாகவே மதுரை மாநகரம் வந்து சொக்கலிங்க மூர்த்தியை வணங்கி விட்டுச் செல்லவேண்டும் என்ற ஆர்வமுடையவனுனன். பாண்டிய னோடு நட்புப் பூணுவதற்காகப் புலவகைக் கையுறைகளை அவனுக்கு அனுப்பினுன். பாண்டியன் அவற்றை ஏற்று மகிழ்ந்து தானும் பல பொருள்களைச் சோழனுக்கு அனுப்பி அன்பைப் புலப்படுத்தினுன். இந்த நட்பைப் பின்னும் உறுதிப் படுத்துவதற்காகச் சோழன் தன் மகளைப் பாண்டியனுக்குத் திருமணம் செய்து தர இசைந்தான்.

இந்தச் செய்தியை அறிந்த இராசேந்திர பாண்டிய னுடைய தம்பியாகிய இராசசிங்கன் என்பவன், சோழன் மகளைத் தானே மணம் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஆவல் கொண்டு காஞ்சிமா நகரத்தை அடைந்தான்.

சோழன் அவனை எதிர்கொண்டு அழைத்துச் சென்று உபசாரம் செய்து தன் மகளை அவனுக்கு மணம் செய்து வைத்

பாலை வனத்தில் படபடப்பார் போல், நல்லோர்
ஞாலநிலை எண்ணி நடுங்குவதும் கண்டோமே.

தான். பிறகு அவனுக்கே பாண்டி நாட்டு அரசாட்சி கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தால் இராசேந்திர பாண்டியனை எதிர்த்துச் சிறையிட முடிவு செய்தான். உடனே நால்வகைச் சேனையுடன் முரசறைவித்துப் புறப்பட்டான் போருக்கு. அவனுடன் அவன் மருகனாகிய பாண்டிய இளவரசனும் போர் செய்ய எழுந்தான்.

இந்தப் படை மதுரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. அந்நகரத்துக்கு இரண்டு யோசனை தூரத்தில் வரும்போது ஒற்றரால் இநதச் செய்தியை அறிந்தான் பாண்டியன். அவனிடம் மிகுதியான படை இல்லை. சோழன் படையோ மிகப் பெரியது என்று கேள்வியுற்றிருந்தான்.

பாண்டிய மன்னன் சொக்கலிங்கப் பெருமான் திருக்கோயிலை அடைந்து இறைவனை வணங்கி, ''எம்பெருமானே, அன்று பாதி இரவில் வந்து உன் திருவருளால் நகரில் புகுந்து உன்னை வணங்கிய சோழன், என்னோடு உறவாட வேண்டுமென்று எண்ணிப் பல கையுறைகளை விடுத்தான். இப்போது படையெடுத்து வந்திருக்கிறான். நியாயமான செயல் செய்வதற்கு அன்று நீ உதவினாய். இன்று அவன் முறையற்ற செயல் புரிகின்றான். இதற்கும் நீ உதவி ஆவாயோ ?'' என்று கூறிப் பணிந்தான். அப்போது அசரீரியாக ஓர் ஒலி எழுந்தது: ''மன்னனே, உன்னுடைய சேனை மெலிவுடையதாக இருந்தாலும் நீ போர்க்களத்துக்குப படைகளுடன் சென்று நாளைக்குப் போர் செய்வாயாக. உனக்கே வெற்றி கிடைக்கும்படி செய்வோம்'' என்று அது கூறியது.

இறைவன் பணித்தருளியதைக் கேட்ட பாண்டியன், அன்பும் உவகையும் பொங்கப் பணிந்து அரண்மனையை அடைந்து விடிவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

இழிவும் பழியும் இரிந்தோட, ஞான
வழியை யறிந்தடியேன் வாழஅருள் செய்யாயே!

விடிவதற்கு முன்னமே எழுந்து கடன்களை முடித்துக் கொண்டு சிவபூசை செய்து விட்டுப் படைகளுடன் போர்க்களத்தை அடைந்தான். கடலை எதிர்த்து ஓர் ஆறு செல்வது போலப் பாண்டியனது சிறிய சேனை சோழ மன்னனுடைய பெரிய சேனையை எதிர்த்தது. போர் கடுமையாக மூண்டது. இரண்டு மன்னர் படைகளும் ஒன்றை ஒன்று எதிர்த்து மிடுக்குடன் போர் செய்தன.

போர் நடந்துகொண்டிருக்கையில் கடுமையான நண்பகல் வந்தது. அது வேனிற்காலம். போர்க் களத்தில் எங்கும் வெம்மை பரந்தது. இறைவனுடைய நெற்றிக் கண்ணில் எழுந்த தீயானது எங்கும் பரவியது போல அந்த வெம்மை இருந்தது. அங்கங்கே இருந்த நீர் நிலைகள் வறண்டு போயிருந்தன. படையிலுள்ள மக்களுக்கும் யானைகளுக்கும் குதிரைகளுக்கும் தண்ணீர்த் தாகம் எழுந்தது. அதனால் மெலிவு உண்டாயிற்று. வெயில் உறைத்து நின்ற போதில், இரக்கமில்லாத கொடிய செல்வரிடம் போய் இரக்கும் ஏழைகளைப் போலச் சிலர் கள்ளியின் நிழலில் ஒதுங்கினர். வறுமையுற்றவர்கள் தம்மைக் காட்டிலும் ஏழைகளாக உள்ளவர்களிடம் சென்று இரப்பதுபோல, இலைகளெல்லாம் கருகி உதிர்ந்த மரத்தின் அடியைச் சிலர் அடைந்தனர். இவ்வாறு இரு சாரார் படையும் வெயிலாலும் தாகத்தாலும் மிகவும் நலிவடைந்து சோர்ந்தன.

அப்போது ஆலவாய் இறைவனாகிய சொக்கலிங்கப் பெருமான் பாண்டியன் சேனை இருந்த இடத்திற்கு நடுவே ஒரு தண்ணீர்ப் பந்தல் உண்டாக்கினான். வேதங்களையே அந்தப் பந்தலின் நான்கு கால்களாக நட்டான். நெற்றியில்

படிப்படியாக் குற்றம் வளர்ந்து பழுத்தோர்,
முடியாப் பிறவிக் கடல்மூழ்கு கின்றோரே.

திரிபுண்டரமும், காதின்மேற் பூவும், அடியில் ஒற்றைக் கிங்கிணியும், தோலாடையும், அதன்மேல் கச்சும் அணிந்து புன்னகை பூத்த திருமுகத்துடன் ஒரு தவசிபோல இறைவன் அந்தப் பந்தலில் நின்று, தண்ணீரை ஒரு சிரகத்தின் வாயி லாக வார்த்தருளினன். ஒருவர் வந்து கேட்டாலும் லட்சம் பேர் வந்து கேட்டாலும் அந்தப் பாத்திரத்திலிருந்தே நீர் வழங் கினன். பாண்டியன படையில் உள்ளார் யாவரும் அந்தப் பந்தருக்குச் சென்று தண்ணீர் உண்டு தாகம் தீர்ந்தனர். அதனல் உரம் பெற்றுச் சோழன் படைமேல் கிளர்ந்து பொங்கி எதிர்த்தனர். சோழன் படை நீர் வேட்கையினல் சோர்வடைந் திருந்தமையால் எதிர் நிற்க இயலவில்லை. எளிதில் தோல்வி யுற்றது. பாண்டியன் படை வீரர் சோழனையும், அவன் மருக ளுகிய பாண்டிய இளவரசனையும் பற்றிச் சென்று இராசேந்திர பாண்டியன் முன் விட்டனர்.

பாண்டிய மன்னன் அவ்விருவரையும் மதுரைத் திருக் கோயிலுக்கு அழைத்துச் சென்று இறைவன்முன் நிறுத்தி, "எம்பெருமானே, நின் திருவுள்ளக் கருத்து யாதோ?" என்று கேட்டான். இறைவன் அசரீரியாக, "நீ அறம் தெரிந்தவன் அல்லவா? உன் எண்ணப்படியே செய்க" என்று அருளி னன். பாண்டியன் அது கேட்டுச் சோழ மன்னனைச் சில யானைகள், குதிரைகள், அணிகலன்கள் முதலியவற்றை வழங்கி அவனூருக்குச் செல்லும்படி விடுத்தான். பிறகு தன்னுடைய தம்பிக்குத் தன்னுடைய செல்வத்தில் ஒரு பகுதியைப் பிரித்து வழங்கித் தனியே வாழச் செய்தான்.

உடைமாற்றிக் கொள்வார் போல், உண்மைநிலை மாற
நடைமாற்றிக் கொள்ளுநர்க்கு, நல்வழியைக் காட்டசயே.

கூந்தலூர்

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

தரையினில் வெகுவழி சார்ந்த மூடனை
வெறியனை நிறைபொறை வேண்டி டாமத
சடலனை மகிமைகள் தாழ்ந்த வீணனை வெகுகேள்வி
தவநெறி தனைவிடு தாண்டு காலியை
யவமதி யதனில்பொ லாங்கு தீமைசெய்
சமடனை வலியஅ சாங்க மாகிய தமியேனை
விரைசெறி குழலியர் வீம்பு நாரியர்
மதிமுக வனிதையர் வாஞ்சை மோகியர்
விழிவலை மகளிரொ டாங்கு கூடிய வினையேனை
வெகுமல ரதுகொடு வேண்டி யாகிலு
மொருமல ரிலைகொடு மோர்ந்து யானுனை
விதமுறு பரிவொடு வீழ்ந்து தாடொழ அருள்வாயே;
ஒருபது சிரமிசை போந்த ராவண
னிருபது புயமுட னேந்து மேதியு
மொருகணை தனிலற வாங்கு மாயவன் மருகோனே!
உனதடி யவர்புக ழாய்ந்த நூலின
ரமரர்கள் முனிவர்க வீந்த பாலகர்
உயர்கதி பெறஅரு ளோங்கு மாமயி லுறைவோனே!
குரைகழல் பணிவொடு கூடயி டார்பொரு
களமிசை யறமது தீர்ந்த சூரர்கள்
குலமுழு தனைவரு மாய்ந்து தூளெழ முனிவோனே!
கொடுவிட மதுதனை வாங்கி யேதிரு
மிடறினி லிருவென ஏந்து மீசுரர்
குருபர னெனவரு கூந்த லூருறை பெருமாளே!

தினையளவு தீமை தினந்தினமும் தேடில்,
பனையளவாம் பாவம், பழுதளவாம் வாழ்க்கையரோ.

(பதவுரை) (ஒருபது......மருகோனே !)

ஒருபது சிரமிசை போந்த ராவணன் - ஒப்பற்ற பத்துத் தலைகளுடன் (ஏதம் கொண்டு) வந்த இராவணனது;

இருபது புயமுடன் - (தொக்கிருந்த) இருபது தோள்களுடன்;

ஏந்தும் ஏதியும் - (சந்திரஹாசம் எனும் பெயருள) ஏந்திய வாளும்; [*ஏதி - வாள்.*]

ஒரு கணைதனில் அற - அம்பு ஒன்றால் அழியுமாறு;

வாங்கும் மாயவன் மருகோனே - (கோதண்டத்தை) வளைத்த (மாயவன் அமிசமான) இராமன் மருமகனே!

(உனதடியவர்.........உறைவோனே!)

உனது அடியவர் - (அன்பொடு எண்ணும்) உன்னுடைய அடியவர்களும்;

புகழ் ஆய்ந்த நூலினர் - (திருவருட்) புகழ் மிகுதியை (அலசி அனுபவிக்கும்) நூல் ஆய்வினரும்;

அமரர்கள் முனிவர்கள் - அமுதம் அருந்தும் இமையவர்களும், (அருந்தவத்) தியான ஆனறோர்களும்;

ஈந்த பாலகர் - (வளம் உதவிக்) காக்கும் வள்ளல்களும்; [*பாலகர் - பரிபாலனர்; காப்பாளர்.*]

உயர் கதி பெற அருள் ஓங்கும் மா மயில் உறைவோனே - பரமுத்திப் பயன் அடைய, பரம அருளைப் பெரிது பாலிக்கும் சிறந்த மயிலைச் செலுத்துபவனே!

(குறை கழல் .....தூளெழ முனிவோனே!)

குரை கழல் பணிவொடு கூம்பிடார் - (தெய்வ) நாதம் எழுப்பும் திருவடிகளை, (குறித்த) விநயங் கொண்டு கும்பிடாதவர்களும்; [*கும்பிடார் என்பது, ஓசை நயம் நோக்கிக் கூம்பிடார் என மொழிமுதல் நீண்டது.*]

தடுக்க முடியாத் தகுதியற்ற நட்பு,
அடுக்க வரும்போ(து,) அதைத்தவிர்த்தி அண்ணுவோ.

பொருகளமிசை அறம் அது தீர்ந்த - போர்க்களத்தில் (யுத்த) தருமம் புறங்காட்டுமாறு, (அளவிலா அக்கிரமங்கள் செய்த);

சூரர்கள் குலம் முழுதும் அனைவரும் மாய்ந்து தூள் எழ முனிவோனே - சூரபதுமன முதலிய அவுணர்குல அனைவரும், பொசுங்கிப் புழுதி பொரி பறக்குமாறு, முன்னேறிச் சினந்த முதல்வனே! [தூள் - புழுதி.]

(கொடுவிடம்...மிடறினில்...பெருமாளே!)

கொடு விடம் அதனை வாங்கியே - கன்ற ஆலகாலத்தை (க் கரத்தில்) எடுத்து; [விடமதனை என்பதில், அது - பகுதிப் பொருள் விகுதி; வாங்குதல் - விரைந்து எடுத்தல்.]

திரு மிடற்றில் இரு என ஏந்தும் ஈசுரர் - அழகிய கழுத்தில் (அமர்ந்து) இரு எனறு, (அதை அங்கேயே) தங்க வைத்துள அளவிலாச் செல்வரான இறைவரது; [ஈசுரர் - சர்வ ஐஸ்வர்ய சதுரர்.]

குருபரன் எனவரு கூந்தலூர் உறை பெருமாளே - குரு முதல்வர் எனுமாறு, கூந்தலூரில் வந்து என்றும் எழுந்தருளியிருக்கும் பெருமிதம் பெறறுள பெருமானே!

(தரையினில்......தாள்தொழ அருள்வாயே!)

தரையினில் வெகு வழி சார்ந்த மூடனை - நிலவுலகில் (எதனிலும் உறுதி யின்றி,) பலவழியிற் சென்று அறிவு பழுதானவனும்;

வெறியனை - (சாதி, மொழி, சமய அருமைகளை அறியாமல், அறிந்தேன் போல் தீரா) வெறி பிடித்துத் திரிபவனும் ;

நிறை பொறை வேண்டிடா மத சடலனை - நிறைவுடைமை, பொறுமை யுடைமைகளை விரும்பாமல், மதம் கொண்ட தேக மதர்ப்பினனும் ;

களங்கமற்ற நெஞ்சில, கருதிக் கசியும்
வளர்நிறையும் அன்பின், வழிமுறையை ஓர்வோமே.

மகிமைகள் தாழ்ந்த வீணனை -(வாக்கு சக்தி, மனோசக்தி, ஆத்ம சக்தி முதலிய வித்தக) மகிமைகள், (ஆசா பாசங்களால்) விரையம் ஆன வீணனும் ;

மிகு கேள்வி தவநெறிதனை விடு தாண்டு காலியை - தலை சிறந்த கேள்வி ஞானம், (அதன் வழி மேற்கொள்ளும்) தவ சாதனைகள் (முதலியவைகளை, அடியொடு) கைவிட்டு, (தகாதவைகளை அனுபவிக்கத்) தாண்டு கால் போட்டு நடந்தவனும் ;] *தாண்டு காலி - ஓட்டமே கொண்ட கால்களை யுடையவன் ; தரித்திர ஜாதகன் எனும் குறிப்புமாம்.*]

அவமதி அதனில் பொலாங்கு தீமை செய் சமடனை - அற்ப அறிவால பொல்லாத் தீச்செய்கை புரிகின்ற (அவதி) மடமை ஆனவனும்; [*சமடன் - அறிவிலிகளின் தலைவன்.*]

வலிய அசாங்கம் ஆகிய தமியேனை - (அரிய) வல்லாண்மைக் கூட்டுறவிற்கு அயலாகி, (அதன் பயனாக) அகதியானவனும் ; [*அசாங்கம் - சத்சங்க சார்பு இல்லாமை.*]

விரை செறி குழலியர் - (கூர்த்த) மணநிறை கூந்தலினர்; வீம்பு நாரியர் - அன்புளர்போல் நடிக்கும் அநாகரிகர்;

[*நாரம் - அன்பு ; வீம்பு நாரம் - அன்புளர்போல் நடிக்கும் போலி கௌரவப் போக்கு.*]

மதிமுக வனிதையர் - நிறைமதி போன்ற முகமுடைய 'இயற்கை வனப்பினர்;

வாஞ்சை மோகியர் - மோக தாகம் மூள்விப்பவர் ஆகிய ;

விழிவலை மகளிரொடு ஆங்கு கூடிய வினையேனை - கண்வலை (வீசும்) காரிகையருடன கலக்கும் கர்மியான அடியேனை ; [*ஆங்கு-அந்த இடம் ; அசைநிலையுமாம்.*]

வெகு மலர் அது கொடு வேண்டி ஆகிலும் - அளவிறந்த மலர்களால் (உன்னை) அர்ச்சிக்கும் காமிய வழிபாட்டிலாயினும் ;

மணம்கமழும் மன்மனத்தர் மாண்பறியாத், தீய
குணம்கமழும் கோட்டிபல, கும்மியடிக் கின்றதுவே.

[மலர் அது என்பதில், அது - பகுதிப் பொருள் விகுதி. வேண்டுதல் - நினைத்தது நிறைவேற அருள்க என்று பிரார்த்தித்தல்.]

ஒரு மலர் இலைகொடும் ஓர்ந்து - ஒரு மலரோ, (அல்லது ஒரு) பச்சிலையோ எடுத்து, (நிஷ்காம்யமாக) நினைந்து ;

[ஓர்தல் - உணர்ந்து ஒன்றுதல்.]

விதமுறு பரிவொடு - பலவிதமாக அமையும் அன்பின் செயலுடன ;

வீழ்ந்து தாள் தொழ அருள்வாயே - திருவடிகளில் வீழ்ந்து வணங்குமாறு, (சிறந்த) அருளைச் செய்தருள், (எ-று.)

விரிவுரை.

பத்துத் தலைகட்குத் தக்க பருமை அறிவு ; அதிகரித்த இருபது தோள்கட்கு உரிய ஆற்றல் ; சகல உலகையும் அழிக்கும் சந்திரஹாஸ வாள் முதலியவைகளால் இறுமாந்து இடரே விளைவித்த இராவணனை, சத்திய சாரமான கோலால் திருமால் கொன்று தொலைத்தார். அதன்பின், அரக்க அறிவால் விளையும் அவதி யழிந்தது. உய்ந்தது உலகம். இது செய்த 'மாயவன்தன் மருகோன்' நீர்.

வாழ்விக்கும் திருவடிகளை வழிபடலாம். சிறந்த அந்நிலை, சிவதருமம் எனப் பெறும். தீராத தீவினைகள் இதனால் தீரும். சிறந்த இச் செயலைச் செய்யாமல், ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் அசுரர்கள் அராஜகம் எழுப்பினர். ஆணவ ஆட்சி, மாயை மாட்சி, கன்மக் காட்சியுடன், அரிஷாதி தோஷங்களைப் படபடத்து எங்கும் பரப்பினர். இது முறையல்ல என்று அறிவித்தீர். அது பொருத அவர்கள், அதர்ம யுத்தத்தை ஆரம்பித்தனர். அதை யுணர்ந்து, அவுணர்

'குலமுழுது அனைவரு மாய்ந்து தூளெழ' வேலால் வென்ற வீரர் நீர். மாமனுர்க்குக் கோல் ; உமக்கு வேல்.

காலம் விரைகிறது, காயம் மெலிகிறது,
ஆலமுண்ட கண்டா! அடியேனை ஆளாயே.

அகில உலகையும் அழிக்க ஆலகாலம் எழுந்தது. அதைச் சிவனார் எடுத்தார். கண்டத்தில் வைத்தார். இங்கேயே நீ இரு என்றார். அவ்வளவில், அதன் வெம்மை அடங்கியது. அதன்பின், சீரார் தென்திசை நோக்கி, அமர்ந்தார் சிவபிரான்.

சிஷ்ய பாவம் காட்ட, அவர் உமது சீடர் ஆயினார். அவரது மற்றொரு ரூபரான நீர், அவர்க்குக் குருபரர் ஆயினீர். உபதேச செய்தி, ஒரு அருளாடல் என்று உணரப் பெறும்.

அதன்பின, அங்கிருந்து, கூந்தலூர் தலத்திற்கு வந்தீர். என்றும் கோயில் கொண்டு இருந்தீர். விமலா! அடியேன் விண்ணப்பம் கேட்டருளும்!

சாதிநெறி, மொழிவழி, சமய மார்க்கம் பல. எந்த வழியிற் சென்றாலும், நேர்மை நினைவு நிலைத்திருந்தால், வாய்மை அமைதி வரும். அவைகள், பெருகிய இயற்கை தந்த பிரசாதங்கள்.

அவைகளின அருமையை அறியாமல், வம்பு நெறி, வழக்கு நெறி, பொய்ம்மை நெறி முதலிய புன்மை வழிகளிற் புழுங்கி, முன்பின் அறியா மூடன் ஆயினன்.

'தரையினில் வெகுவழி சார்ந்த மூடன்' [*மூடன் என்பதில் மூடு - பகுதி; அறிவில் இருள அடர்ந்தவன் என்பது பொருள்.*]

''பன்மார்க்கம் ஆன பலஅடி பெற்றேனும், ஒரு
சன்மார்க்கம் கண்டு துலங்குநாள எந்நாளோ? ''

என்ற தாயுமானார், வழியல்லா வழி செல்வார்தம் தீரா வேதனையைத் தெரிவிக்கிறார்.

'' வெறிவென் றவரோ டுறும்வே லவனே! ''

அடியேன் சாதி வெறி, சமய வெறி, மொழி வெறி, கள் வெறி, காம வெறி முதலிய எத்தனையோ வெறி மயமாகி வெம்புகின்றவன். இவைகளால் இன்ப நெறி தோன்றாமல்,

---

உள்ளம் திகைக்க, வியப்பு உருவாகக்,
கள்ளப் புலக்கூத்து கால்மாறு கின்றதுவே.

துன்பச் சேற்றில் துவள்கின்றேன். [*வெறி - மயக்கின் முதிர்வில் பிறக்கும் அசுர ஆவேசம்.*]

எதனிலும் எவரிலும் நிறைவு காணலாம். குறுகல் அறிவால் குறையே காண்கின்றேன். அதனால், பொறுமை ஓடிப் போய்விடுகின்றது. மதமதப்பான உடலும், ஏதாயினும் ஒரு அக்கப் போரை எழுப்பிக் கொண்டே இருக்கிறது. அதனால்தான் என்னை,

'நிறை பொறை வேண்டிடா மத சடலன்' என்கிறேன். திருத்துறையூர் தலத்தில்,

"அத்தா உன்னை வேண்டிக் கொள்வேன் தவநெறியே"

என்று, விமலனிடம் நம்பியாரூர் விண்ணப்பித்தார். அதுபோல்,

"தங்கிய தவத்துணர்வு தந்தடிமை முத்திபெற
சந்திர வெளிக்கு வழி அருள்வாயே"

என்று, முன்னும் ஒரு தரம் முன்னியுளன்.

தவ நெறியில் சிவம்; பிற நெறியிற் பவம்; பவ நெறியிற் சவம். சீ! என்ன வாழ்க்கை இது!

மனனம் செய்யத் தக்க இவைகளை மறந்து, தவளைபோல் எதனில் எதனிலேயோ தாவித் தளரும் அடியேன், தாண்டுகாலி எனும் தகுதியற்ற பெயரைத் தழுவியுளன்.

அவமதி காரணமாக, பொல்லாத் தீமைகளையே புரிபவன் ஆயினன். ஆம். நான் ஒரு சமடன்; (குறிப்பு மொழி இது, மடசாம்பிராணி என்று இன்றைய வழக்கிலும் இருக்கிறது.)

சால நலம் தரும் சத்சங்க சார்பு; அடியேன் துர்ச்சங்க சகவாசம் உடையவன். அதனால் அசாங்கன் ஆயினன்.

அறிவு கொளுத்தி ஆள்வார் இல்லை; அதனால் இன்று வரை அகதியாக இருக்கிறேன். என்றும் தமியேன் என்கிறேன். [*தமியன் - ஏழை; ஆதரவு இலாதவன்.*]

புறவுலகர் போக்கு, புரியாப் புதிரா,
நிறம்மாறும் பச்சோந்தி தன்னைநிளைப் பிக்கிறதே.

இதனால் குழலியர், நாரியர், மதிமுக வனிதையர், மோகியர், விழிவலை மகளிரை விரும்பிய கர்மியாய், இன்பம் என்னும் துன்பம் கொண்டு துவள்கின்றேன். என்ன கன்றாவி யான வாழ்வு இது! பொழுது வீணே போகிறதே!

ஏராளமான மலர்களைப் பறிக்கலாம். அர்ச்சித்து, அதுதா! இதுதா அரசே! என்று, காமிய வழிபாட்டில் களிக்கலாம். அல்லது ஒரே மலர், ஒரே பத்திரம் தேர்ந்து எடுத்து, முதன்மை அன்பு முன்வந்து உதவ, எட்டுறுப்பும் நிலம் தோய, எதையும் வேண்டாமல் உமது திருவடிகளை இறைஞ்சலாம்.

"புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு."

"போதும் பெருவிடில் பச்சிலை உண்டு."

"குடங்கை நீரும், பச்சிலையும் இடுவார்க்கு
இமையாக் குஞ்சரமும்,
படங்கொள் பாயும், பூவணையும் தருவாய்
மதுரைப் பரமேட்டி"

என்றெல்லாம், ஆராதிக்கும் முறையும் பயனும் ஆன்றோர் பலர் அறிவித்துளர்.

சிவமாக்கும் பண்பை, அன்பு என்று அறிவம். அப் பண்பிலிருந்து வெளிவருவது பரிவு. விதவிதமாக அப் பரிவு வெளிப்படும். 'விதமுறு பரிவொடு' தாளில் வீழ்ந்தால், சீவன் சிவமாகும் திண்ணம். அந்த அனுபவம் விளைய, மாயோன் மருகோனே! மயில் உறைவோனே! அவுணரை முனிவோனே! பெருமாளே! அருள்வாயே! என்று, வீரிட்டு அழுது விண்ணப் பித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம்.

ஓம்.

கனவுலகில், மெய்ம்மைக் கலையுலகில், இம்மை
நனவுலகில், நின்னையே நம்பியுளன் எம்மானே.

சண்முக கவச விளக்கம்.

(திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.)

உறுதியாய் முன்கை தன்னை உமையிள மதலை காக்க
தறுகணே றிடவே என்கைத் தலத்தைமா முருகன் காக்க
புறங்கையை அயிலோன் காக்க, பொறிக்கர விரல்கள் [பத்தும்
பிறங்குமால் மருகன் காக்க பின் முதுகைச் சேய் காக்க

அருஞ்சொல் விளக்கம் :

தறுகண் - அஞ்சாமை ; அயில் - வேல் ; பிறங்கும் - விளங்கும். பொறி - கருவி ; சேய் - முருகக் குழந்தை.

விளக்கம் :

முன்கையை, உமையாள் இளமகன் (குமரன்), மிக்க வன்மை பெறக் காத்தருளுவானாக. என் கைகளை அஞ்சாத திறல் மிகும்படி பெரும் பெயர் முருகன் காத்தருளுவானாக. பின் கையை வேலவன் காக்க. (தொழுதல், மலரிட்டு வழி படல் போனற பிறதொழில் புரிதற்குக்) கருவியாய் அமைந்த கைவிரல்கள் பத்தினையும் விளங்கும் மாலோன் மருகன் காத்தருளுக. பின் முதுகை முருகக் குழவி காத்தருளுக.

விசேடம் :

உமையிளமதலை - உமை - உமா என்ற வடசொல் தமிழில் 'உமை' என்று வந்தது. தேவி மலையரசன் மகளாகப் பார்வதி என்று வளர்ந்து வந்த போது, ஐந்தாம் ஆண்டிலேயே அரனரை வேண்டித் தவஞ் செய்ய விரும்பினாள். தந்தை,

---

ஊழால் அறிவிழந்தும், உன்னை மறந்தறியேன்;
ஏழாய்! வாவென்(று,) எனையேற்றுக் கொள்ளாயே!

தேவியின் குழந்தைப் பருவம் தவத்திற்குத் தகுதியல்ல என்றான். அதனால், அம்மை அழத் தொடங்கினாள். மலையரசனும் உ+மா - அழ வேண்டாம் எனத் தடுத்தான். அதிலிருந்து 'உமா' என்ற பெயர் பார்வதிக்கு வந்தது என்பது புராண வரலாறு. வியஷ்டிப் பிரணவம் அ+உ+ம் என்ப. அதில் 'உ' கரம் முதலாகக் கொண்டு உ+ம்+அ என்றால், திரியக் பிரணவம் ஆகும். இதுவே உமை என்ற நாம மந்திரம் என்பர். "உம் எனும் அக்கரத்தால் உமை எனப் பெயர் உறும் பரை" என்று பாம்பனடிகளே குறித்துள்ளார். இனி, உமையம்மை கையிலேந்தும் குழந்தை, என் முன்னங் கையைக் காக்க என்றார். வழிபாட்டிற்கு முந்தும் கை உறுதியா யிருத்தலின் அவசியம் நோக்கி வேண்டினாரெனலுமாம். "கடித்துணர் ஒன்றிய முகில் குழலுங் குளிர் கலைப்பிறை என்றிடு நுதல் திலகந்திகழ் காசு உமையாள் இளமா மகனே!" (தயிர்வண்ணம்.)

ஆண்மைக்காரப் பெருமாள், அவுணர்குல மடங்கப் பொடியாக்கிய பெருமாள், ஞானமும், அழகும், ஆண்மையும் உடைய பெருமாளாய், 'நானென்று மார்தட்டும்' அஞ்சா நெஞ்சு ஆக்கந் தரவல்ல (பெருமை போன்றவற்றை ஆளும் பெருமாள்) ஆதலின "மா முருகன்" எனறு கூறினார். குமார பிரானின் திருநாமங்களுள் முருக நாமமே பலபொருள் ஒரு சொல்லாக நிற்கும் பெருமை நோக்கி 'மா முருகன்' எனப்பட்டது.

"மொழிக்குத் துணை முருகா எனும் நாமங்கள்" என்பதால் இதனை அறியலாம்.

அயிலோன் :—கூரிய வேலுடையான். (வையிற் கதிர்வடி வேலோன்.) வேலைப் பிடிக்கும் செங்கை வேந்தன் புறங்கையைக் காக்க என்றதாம். பொறி—என்பது கருவி என்ற

தொற்றுநோய் போலக் குலஇயல்பு தொந்தரிக்க,
பற்றியெரிந்(து) உள்ளம், பதைக்கின்ற தம்மாவோ!

பொருளில் உள்ளது. பொறித்தல்—எழுதுதல் என்று மட்டுமே பொருள் கண்டாருளர். எழுதும் கை பெரும்பாலும் வலக்கையே ஆதலாலும், இடக் கையாலும் எழுதுவாரும் உளர் என்பார்க்கு அக்கையிலும் ஐந்து விரல்களே உள்ளன. எழுதும் போது பயன்படும் கை ஒன்று (ஐந்து விரல்கள் மட்டுமே) தான் என்ற காரணங்களால் பின் 'விரல்கள் பத்தும்' என்பவற்றோடு மாறுபடு வேது காட்டி மறுக்க. பத்து விரல்களைப் பத்து அவதார மெடுத்த திருமால் மருகன் காக்க என்ற நயம் பாராட்டற்குரியது.

மால்மருகன்—திருமாலின் தங்கையாம் பார்வதியாருக்குப் பிள்ளை என்னும் முறையில் நிற்பது போல அத் திருமாலுக்கு மருகனெனும் முறையில் நிற்போன் மால்மருகன் என்க. மருகன்-மருமகன்.

" அனுதினம் விழிதுயில் பவர்தங் கச்சிக்கொரு
புதல்வோனே" (அருணகிரிநாதர்)

சேய்—செம்மை என்ற பண்புப் பெயர் திரிந்து சேய் ஆயது. செந்நிறமுடையான், கட்டிளமை யுடையான், சூரன் மகன் என்ற பொருள்கள் கொள்ளப்படும். "செவ்வாய் முருகன் இளமை புத்திரன், இவ்வாறெல்லாம் சேய் என இசைப்பர்" (சேந்தன் திவாகரம்.) சேய் என்பது பால சுப்பிரமணிய மெனவும் பகரப்படுகின்றது. அரன்மகன், சேந்தன் என்ற திருநாமங்களின் பொருளுமாம்."

" இளமை என்பது என்றும் ஒரு படித்தாயுள்ள
முழுமுல சுபாவப் பொருள் என்பதை உணர்த்தும்"
(பாம்பனடிகள்)

"என்றும் அகலாத இளமைக்கார" (அருணகிரிநாதர்)
"என்றும் இளையாய் அழகியாய்" (நக்கீரர்)

அடக்க முடியாத ஆசைபல கொண்டு,
முடக்கி விழுந்தாரை, முன்னிலையிற் கண்டேனே.

பின் முதுகைச் சேய் காக்க—குழந்தைகள் விளையாட்டில் முதுகைக் கட்டிக் கொண்டு ஏறி விளையாடுவதும் ஒன்று. இதனைப் பெரியாழ்வார் 'புறம் புல்குதல்' எனக் கூறுவர். நம் குழந்தை வேற்குமரனும் சேய் 'பின் முதுகை காக்க' என்று கூறும் அழகை என்னென்று வியப்பது.

அநுபூதி விளக்கம்

சோபான லட்சியன்

(கி. வா. ஜ.)

'நமனார் வந்து உயிரைக் கொண்டு போவதற்காக நிற்கும் அந்த நாளிலே திருவடியைக் காட்டித் துணையாக நின்று பாதுகாக்க வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார் அருணகிரியார்.

"கார்மா மிசைகா லன்வரிற் கலபத்து
ஏர்மா மிசைவந்து எதிரப் படுவாய்"

என்று முன்பும் வேண்டிக் கொண்டிருக்கிறார். இத்தகைய வேண்டுகோளைப் பெருமக்கள் பலர் இறைவனிடம் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

விண்ணப்பத்துக்கு விலாசம் இடுவதுபோல, முருகனை நினைத்துப் புகழ்கிறார். காலனுடைய உருவம் எங்கே? முருகனுடைய உருவம் எங்கே? காலனை நினைத்தால் அச்சம் எழுகிறது. முருகனை நினைத்தால் இன்பம் உண்டாகிறது. காலன் பயங்கரமான வடியுடையவன். முருகனோ உள்ளத்தைக் கவரும் பேரெழிலுடையவன். காலனுடைய நினைவு வந்தவுடன் அதனால் உண்டாகும் அச்சத்தை மாற்ற முருகனுடைய

ஆசையால், நாசவழி ஆன பொருளீட்டிப்,
பாசப் படலத்தால், பல்லிளித்தார் பல்லோரே.

அழகை நினைக்கிறார் அருணகிரியார்; 'அழகா!' என்று விளிக்கிறார்.

வாகா! முருகா!

வாகு என்பது அழகைக் குறிப்பது. ஆற்றலையும் குறிக்கும். முருகன் என்னும் திருநாமமோ எத்தனையோ சிறந்த பண்புகளைக் குறிக்கும் அற்புதச் சொல். அது பெரும் பெயர். இளமை, அழகு, மணம், தெய்வத்தன்மை, தேன் முதலிய இனிய பண்புகளையும் பொருள்களையும் குறிக்க வழங்குவது அது. இனிமையே உருவாக உடைய வடிவேற் பெருமானுக்கே தனி யுரிமை யுடைய திருநாமம் அது. 'பிறரால் பெறுதற்கரிய இலக்கணங்களைக் குறிக்கும் பெரும் பெயராகி முருகன் என்னும் திருநாமம் உடையவனே' என்று நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் பாடுகிறார்;

"அரும் பெறல் மரபிற் பெரும்பெயர் முருக!"

இந்தப் பேரழகனுக்கு வாய்த்த வாகனமோ அழகுப் பறவையாகிய மயில். முருகன் அடியார் மட்டுமல்ல, யார் கண்டாலும், நல்ல பார்வையையுடைய கண்ணுடையராக இருந்தால், நிச்சயமாக மயிலின் அழகைக் கண்டு களிப்பார். முருகன் அந்த அழகுப் பறவையின மேல் ஊர்ந்து வருகிறான். 'காலன் என்பால் வரும்போது நீ விரைவில் என்னை அடைவதற்காகவே மயில் வாகனத்தைக் கொண்டிருக்கிறாயே!' என்ற எண்ணமுடையவரைப் போல அடுத்து,

மயில் வாகனனே!

என்றார்.

வாகா, முருகா, மயில் வாகனனே!

என்று அவனுடைய தோற்றத்தைக் கூறியவர், தொடர்ந்து அவன் சிறப்பைப் பாடுகிறார். அவன் சரியை யாளருக்கும்

நல்வழியைப் பேசுபவர், நாலா யிரவருளர்;
சொல்வழியில் நிற்பாரைத் தேடிச்சோர்ந் திட்டேனே

கினிமையாளருக்கும் வழிபடவும் அருச்சனை புரியவும் பொருத்த மாக மயில் வாகனக் கடவுளாகத் தோற்றம் அளிக்கிருன். நான்கு வகைச் சோபானங்களுள் மூன்ருவது யோகம். உண் மூக்கு நாட்டம் உடையவர்களாய்த் தியான சமாதியில் ஈடுபடுப வர்கள் யோகியர்கள். அவர்களுக்கு யோகம் நிறைவு பெறும்படி அருளும் பெருமான் முருகன். அதனால் அவனை

யோகா!

என்று புகழ்கிருர். யோகத்தின் லட்சியமாக இருக்கும் பெருமான், யோக நெறியிற் செல்வோருக்குத் துணையாக இருப்பவன் என்று பொருள் கொள்ளலாம்.

யோகம் என்பது இரண்டன் கூட்டம் என்னும் பொருளுடையது. பலவற்றைக் கூட்டுவதையும் யோகம் என்று சொல்வதுண்டு. பல சரக்குகளைக் கூட்டியமைத்த மருந்துக்கு யோகம் என்ற பெயர் வழங்குவது காண்க. முருகன் பசுவையும் பதியையும் ஒன்று சேர்ப்பவன்; நல்லவர்களை இணைப்பவன்; கணவனையும் மனைவியையும் ஒன்றுபடுத்துபவன்; பொருளையும் போகத்தையும் இணைப்பவன்; பிரிந்தவற்றைப் பொருத்துகிறவன். ஆதலால் யோகன் என்னும் பெயர் பெற்ருன் என்பதும் பொருந்தும்.

இனி நான்காவது சோபானமாகிய ஞானத்தையும் முருகன் அருள்வதைச் சொல்கிருர் அருணை முனிவர். அவன் சிவஞானத்தை உபதேசிக்கிறவன். அகத்தியர் முதலியவர்களுக்கு ஞானேபதேசம் செய்த குருநாதன் அவன். சிவபெருமானுக்கே உபதேசம் புரிந்த குமர குருபரன் அல்லவா? ஆதலால்,

சிவஞா னேபதே சகனே!

என்று பாராட்டுகிருர். சிவஞானேபதேசகனே என்பது ஓசை நோக்கிக் குறைந்து நின்றது. இந்தத் தொடருக்கு இரண்டு

வளமை பெறக்கற்று, வாழவழி தந்த
இளமையை, எண்ணிமனம் இன்பமுறு கின்றதுவே.

வகையாகப் பொருள் கொள்ளலாம். தன்னை அண்டி வந்து அன்பு செய்பவர்களுக்குச் சிவஞானத்தை உபதேசம் செய்ப வன் என்பது ஒன்று; சிவபெருமானுக்கு ஞானோபதேசம் செய்பவன் என்பது மற்றொன்று.

"தேவே சிவசங் கரதே சிகனே"

என்று வேறொரு பாட்டிலும் இதைச் சொன்னார்.

இவ்வாறு நால்வகைப் படிகளில் நிற்பவர்களுக்கும் அருள் செய்யும் கடவுளாக முருகன் விளங்குகிறான். அவனை விளித்து, "காலன் வரும்போது என்னைக் காப்பாற்ற வேண் டும்" என்று விண்ணப்பம் செய்துகொண்டார் அருணகிரியார். அந்த விண்ணப்பத்தை அப்படியே வாங்கி நாமும் முருகனிடம் சமர்ப்பிக்க வேண்டியது தானே!

சாகாது எனையே சரணங் களிலே
காகா, நமனார் கலகம் செயும்நாள்;
வாகா, முருகா, மயில்வா கனனே,
யோகா, சிவஞா னொபதே சகனே!

[யமன் என் உயிரை எடுத்துச் செல்லவந்து போராடும் போது என்னை ஏனையவர்கள் மரணம் அடைவது போலச் சாகும்படி விடாமல் உன் திருவடிகளிலே இட்டுப் பாது காப்பாயாக; அழகுடையவனே, முருகா, மயில்வாகனக் கடவுளே, யோகத்தின் லட்சியமாக உள்ளவனே, சிவஞா னத்தை உபதேசிப்பவனே.

[சரணம் - திருவடி. வாகு - அழகு, ஆற்றல்.]

இது கந்தர் அனுபூதியில் வரும் 41-ஆவது பாடல்.

போட்டிமனப் பான்மை போய்த்தொலைய, நேர்மைநெறி காட்டியாட் கொள்ளும் கடவுணெறி வாழியரோ.

சித்தர்கள் சிறப்பு 26

பிராந்த பாக்கர்

[ரஸபதி]

கேண்மை நிறைந்தது கேரள தேசம். நாட்டு நடுவில், நலம் சிறந்தவர் ஒருவர். அவர் பெயர் நாராயணர். உத்தமர் அவர் கண்கள், எப்பொழுதும் உள் செருகி யிருக்கும்.

எவரோடும் பேச மாட்டார். பேச ஆரம்பித்தால், வித்தக அவர் சொற்கள், எவர்க்கும் விளங்குவது இல்லை. கெக்கலி கொட்டிச் சிரிப்பார். திடீரென்று அழுவார். ஓடுவார். சட்டென்று நிற்பார். இளமையி லிருந்து, அவர் செய்திகள் இவை. அவர் மனநிலையை, மக்கள் ஆய்ந்திலர். எனினும், அவரைப் பிராந்தன் என்று அறிந்தனர். [*பிராந்தன் - பயித்தியன்.*]

பெயர்க்குத் தக்கபடி, பிராந்தன் இருக்கிறான். அவன் ஜாதகம் அப்படி என்று, ஊரவர் பேசுவது உண்டு.

பிராந்தர், மாலையில் பிட்சை யெடுப்பார். கால்படி அரிசி அகப்படும். ஊர்ப் பொதுக்குளம் நோக்கி ஓடுவார். இருக்க இடமற்ற ஏழைகள், அங்கு சமையல் செய்து கொண்டு இருப்பர். அதைப் பிராந்தர் அறிவார். விரைவார். கொதிக்கும் சாதப் பானையை, அவர்கள் எதிரிலேயே இறக்கி வைப்பார். அரிசி யிருக்கும் தன் பாத்திரத்தை, அந்த அடுப்பின் மேல் ஏற்றுவார்.

பயித்தியம் எனும் பயத்தால், அவர்கள் அவரை மறுப்பது இல்லை. தோற்றம் கண்டு வெறுப்பதும் இல்லை.

பரிபாகரான பிராந்தர் சாதம், பதம் ஆகும். இறக்கி வைப்பார். குளத்தில் இறங்குவார். நீராடுவார். புனித நீறு

ஐயத்தோ டச்சம் அருள்நூலிற் கொள்ளாமல்,
செய்யத்தா! மேன்மைநெறி சேர்த்தா-எனபோமே.

பூசுவார், சிவ சிவ என்பார். கரையேறுவார். உப்பில்லை, ஊறுகாய் இல்லை என்று ஒன்றையும் எண்ணார். உவந்து பசி தீர உண்பார். கைவாய் அலம்புவார். அதே இடத்தில் படுப்பார். உணர்வு எங்கோ உறவு பெறும். கண்மூடுவார். இரவு முழுதும் இந்த நிலை.

வைகறையில் எழுவார். விரைந்து நடப்பார். ஊரின் புறத்தில், ஒரு குன்று உயர்ந்துளது. அதன் அடியில், உருண்டு திரண்ட ஒரு கல் இருந்தது. பாரமான அக்கல்லை, குன்றின் மேல் எக்கி முக்கி ஏற்றுவார். சிறிது தூரம் சென்றதும், சிரம பரிகாரம் செய்து கொள்வார். வேர்த்து விறுவிறுக்க, மறுபடியும் உருட்டிக் கொண்டே உச்சிக்குச் செல்வார்.

ஏற்றிய கல் இறங்கி விடாதபடி, கற்களை நாற்புறமும் காப்பாக அணைப்பார். அக் கல்லின்மேல் ஏறி, வீராசனம் இட்டு வீற்றிருப்பார். கூலி வேலை செய்து, மாலையில் வீடு திரும்பும் தொழிலாளர்கள், கம்பீரமாக அமர்ந்து இருக்கும் பிராந்தரைக் காண்பர்.

உழைக்கிறோம் ; கூலியை யஜமானர் கொடுக்கிறார். இந்தப் பிராந்தன், பாடு பல பட்டு, உச்சிக்குக் கல்லை உருட்டிக் கொண்டு போகிறான் ; எப்பயனும் இல்லை ; இப் படியும் ஒரு ஏமாளி யிருக்கின்றானே என்று எண்ணுவர் ; கலகல என்று நகைப்பர்.

அதைப் பிராந்தர் அறிவார். ஏறி யிருந்த கல்லை விட்டு இறங்குவார். உச்சியில் இருக்கும் கல்லை, அவர்களை நோக்கி உருட்டி விடுவார்.

டமடம டும் டுடுடும் என வீறு ஒலியுடன், கல் கீழ் நோக்கி விரைந்து வரும். ஹஹ்ஹஹாஹா என்று, கெக்கலி

கதியை யருளும் கடவுளருள் எண்ணார்;
விதிநெறியிற் சிக்குண்டு, விம்மியழு கின்றவரே.

கொட்டிச் சிரித்தபடி, அதன்பின் தொடர்ந்து ஓடி வருவார் பிராந்தர்.

விரைந்து வரும் கல், எங்குத் தம்மேல் விழுந்து விடுமோ என்று அஞ்சி, முன் சிரித்தவர்கள் இப்போது சிதறி ஓடுவர்.

அதன் பின் பிராந்தர், அடிவாரத்திற்கு வருவார். பழையபடி மாலை பிட்சை. சமையல். உண்ணல். உறங்கல். காலையில் இருந்து, உச்சியில் கல்லை உயர்த்தல். மாலையில் உருட்டி விடுதல். இவைகள்தான் பிராந்தரது நித்திய செயல்கள்.

ஒரு நாள், எந்த ஏழையும் எதிர்ப்படவில்லை. அதனால் பிட்சையில் கிடைத்த அரிசியுடன், உருத்திர பூமி நோக்கி ஓடினார். ஒரு காஷ்டத்தில் நெருப்பு இருந்தது. அடுப்பாகக் கற்களை அடுக்கினார். சுள்ளிகளைப் பொறுக்கிச் சேர்த்தார். எரியும் கொள்ளியை எடுத்தார். நெருப்பை மூட்டினார். சமைத்தார். உண்டார். பாய்போல் எண்ணித் தரையிற் படுத்தார்.

நள்ளிரவுக் காலம். அது புனித ருத்திரபூமி. கொள்ளிக்கும் விள்ளாத கூரிருள். அந்நேரத்தில், அங்கு வழக்கப்படி வரும் காளி வந்தாள். கண்ணயரும் பாக்கரைக் கண்டாள். ஆத்மாக்கட்குச் சாந்தி அளிக்க, அவள் தாண்டவம் ஆடும் நேரம் அது. ஆதலின், அவரை அங்கிருந்து அகற்ற நினைத்தாள்.

கலகல கிலுகிலு என்று, சதங்கை ஒலியை எழுப்பினள். பிராந்தர் எழுந்திலர். சினந்த காளி, ஒரு காலால் நிலத்தை உதைத்தாள். அதனால் நிலமே அதிர்ந்தது. அந்த அதிர்ச்சியில், சிறிது கண் திறந்தார்; எனினும், படுக்கை விட்டு எழுந்திலர். பாதிப் பார்வையால், காளியைப் பார்த்தார்.

அன்பாளர் சொல்லை அவமதித்தல் செய்வாரைத்,
துன்பம் துறுதுறுத்துத் தொல்லை கொடுக்குமரோ

என்ன அம்மா இது ! ஏன் இப்படி ஆரவாரத்தை எழுப்புகிருய் ? என்ருர். அஞ்சாத அவர் கேள்வி, காளிக்கு ஆச்சரியத்தை அளித்தது.

ஏய் ! நீ யார் ? என்று அதட்டினள்.

நான் யார் என்று, இன்றுவரை அறிய முயன்று கொண்டு இருக்கிறேன். இந்நிலையில், என்னை உனக்கு அறிவிக்க என்ருல் இயலுமா ? அறிவித்தால்தான் புரியுமா ?

ஹூம். அடேய் ! நான் காளி. தெரிகிறதா ?

கனகன கண்கள். கடுகடு முகம். கோரப் பற்கள். காள நிறம். கைகளில் படைகள். படபடக்கும் சொற்கள் முதலியன, நீ காளி என்பதைப் பறை யறைகின்றன. இந்த உருட்டல் மிரட்டல்கள் பிறரிடத்தில். என்னிடம் வேண்டா. போபோ ! என்று, பிராந்தர் அசட்டையாகப் பேசினுர்.

அவர் பதில் கேட்ட காளியின் மனமே அதிர்ந்தது. ஓ ! இவர் ஒரு சித்தர். அறிதுயிலில் இருக்கும் இவரை, உறங்குகிருர் என்று தீர்மானித்தது பிழை என்று உணர்ந்தாள். உடனே தன் மாபெரும் பயங்கர கோலத்தை மறைத்தாள். நீல சௌந்தர்ய மேனி கொண்டு நின்ருள். கனிவொடு விநயம் காட்டினள்.

சித்தர்கள் பெரும ! என் பார்வையில் அகப்பட்டவர்கள், ஏதாவது ஒரு பயனை யடைவர். என்ன வேண்டும் ? தயவு செய்து கேளுங்கள் !

வீணுக நேரத்தை விரையம் செய்கிருய். எனக்கு எதனிலும் விருப்பம் இல்லை. நீ பேசாது இருந்தால் அதுவே போதும் !

தற்பெருமை என்கின்ற தம்பட்டம் தட்டாமல்,
சிற்பரனின் சீர்பாடும் சீலனர் வாழியரோ.

அப்படி நீர் அறிவிப்பது சரியல்ல. தயவு செய்து ஏதாயினும் கேளுங்கள் என்று, கெஞ்சி வினவினள் காளிகா தேவி.

இதோ பார்! எனது வலக்கால் ஆனைக்கால். இந்த வீக்கத்தை, இடது காலிற்கு மாற்ற முடியுமா? என்றார்.

இன்று சித்தரான நீர், முன் பிறப்பில் ஒரு உத்தம ஞானியை உதைத்தீர். அந்தப் பாவம், இந்தப் பிறப்பில் ஆனைக்காலாக ஆகி யிருக்கிறது; இக் கால்கள் இரண்டையும், இப்போதே சமமாக்கி விடட்டுமா?

அப் பாபத்தை இப்போது அனுபவிக்க வேண்டும்; இன்றேல் இனி ஒரு பிறப்பை எடுக்கும்படி நேரும். அந்தப் பாவத்தையே உன்னால் அழிக்க முடியுமா?

அது முடியாது. தயவுசெய்து வேறு ஏதாயினும் கேளுங்கள் தருகிறேன்.

பிராந்தர் நகைத்தார், ஆனையைப் பூனையாக்க, பூனையைப் புலியாக்க எம்மாலும் இயலும். அதிர்க்கும் வினையை, அனுபவிக்க வேண்டும் என்று எண்ணினன்; அதனால்தான், ஆனைக்கால் வீக்கத்தை அகற்ற நினைத்திலன்.

கண்ணெதிரில் வருபவர்தம் கவலையைப் போக்கக் கருதினேன். அன்பொடு அணுகினன். உலக மக்கள் ஒதுங்கிச் சென்றனர். உணர்கிறேன். ஒருவரும் இதுவரை உருப்படவில்லை. எண்ணரிய பிறவிகளில், மானுடம் ஏற்றம் உடையது. அது எத்தனையோ பிறவிகளில் செய்த புண்ணியத்தின் பயன். ஏறுமுகமான பிறப்பினர், வாக்காலும் நினைவாலும் இறங்குமுகம் ஆகின்றார். ஏறுவது சிரமம்; இறங்குவது சுலபம்.

பொறுத்து இறைபுகழைப் போற்றாதார் சொல்லை,
மறுத்தேம், வெறுத்தேம், மதிம்யங்க மாட்டோமே.

எவர்க்கும் இவைகளை, அறிவிக்க எண்ணினேன். உருளைக் கல்லை, சிரமப் பட்டுக் குன்றில் உயர்த்தினேன். உயர்த்திய கல்லை, கீழ்நோக்கி உருட்டினேன். அது கண்டு அஞ்சி ஓடினர். ஏன் இப்படிச் செய்கிறீர் என்று, எவரும் என்னை வினவிலர். இந்நுட்பத்தை, இயல்பாக அறிந்து கொள்ளும் அறிவு எவர்க்குமே இல்லை. பார்த்தவர்கள், பிராந்தன் எனும் பட்டத்தைச் சூட்டினர். அவரவர் விதிவழி அவரவர் செலகின்ருர். எவரையும் திருத்த இயலாது. அவரவர் புண்ணியந்தான், நல்லறிவை அவர்கட்கு நல்கும்.

மக்கள் மந்த மதியினர். நள்ளிரவில் உன் கோரம் கண்டு நடுங்காதபடி, எவர் கண்கட்கும் தெரியாமல் நடமாடு! இதுவே நான் கேட்கும் வரம் என்ருர்.

அவர் கருணையை அறிந்த காளி, அப்படியே என்று வாக்களித்து மறைந்தாள். *அன்று* முதல், காளியை எவரும் கண்டது இல்லை.

இறுதிவரை இயற்கை பிரமசாரியா யிருந்த நாராயணர், நாடு முழுதும் நடமாடினுர். அணுகியவர் பயனை யடைந்தனர்; மற்றவர் அவரை மறந்தே போயினர். மறந்தாரை மறந்தார். புனித ஒரு காட்டுள் புகுந்தார். அரிய தவத்தில் *ஆழ்ந்தார். அதன்பின் என்ன ஆஞர்?* எவரும் அறிந்திலர்.

* * * *

அவர் தமையனுர் ஒருவர், திருவஞ்சைக் களத்தில் இருந்தார். இல்லற நல்லறம் ஏற்ற அவரை, பாக்கர் என்று எவரும் அழைத்தனர்.

வளமான மூங்கிலை, பாக்கர் கால் வெள்ளிக்கு வாங்குவார். பிளப்பார். முறங்கள் பத்து முடைவார். ஒரு முறம்

உடல்பொருத்தம், உள்ளப் பொருத்தம் உடையோர்,
கடல்சூழ் உலகத்தில் எங்குளர்நீ காட்டாயே.

ஒரு வெள்ளி. இப்படி வீதிதோறும் சென்று விலை கூறுவார். அவர் முறம் அதிக உரம். பலகாலம் பயன்படும் என்று, அரிவையர் அவரை அணுகுவர்.

பாக்கா! உழைப்பாகத்தான் முறத்தை உருவாக்கி யிருக்கிறாய். ஒத்துக் கொள்கிறோம். அவ்வளவு விலை கொடுத்து வாங்க எங்களால் ஆகுமா? கொஞ்சம் விலை குறைத்துக் கொடு என்று, கொஞ்சிக் கெஞ்சுவர் கோதையர்.

அம்மணீ! இது நான் வைத்த விலையல்ல. இயற்கையின் கட்டளை என்று எண்ணுங்கள்! ஏற்க வசதி யில்லையேல், இனமாகத் தருகிறேன் என்பார். அவர் சொற்களில், ஐயுற்று நோக்குவர் அரிவையர்.

அம்மைமீர்! வாக்குத் தவற மாட்டான் பாக்கன். எடுத்துக் கொள்ளுங்கள் என்று, ஒன்பது பேரிடம் ஒன்பது முறங்களை ஒப்படைப்பார். ஒரு முறம் மிச்சம். வெறுங் கையொடு வீட்டிற்குத் திரும்புவார்.

நாளுக்கு ஒரு வெள்ளி. அது அவர் தலை விதி. நித்திய மும் அதன் செயல் நிறைவேற வேண்டும். அது கருதிய கால தேவதை, மனித உருவில் வரும். பேரமே பேசாமல், ஒரு வெள்ளியை உதவும். இருந்த முறத்தை வாங்கும். எங்கோ சென்று மறையும்.

வாழும் வழியறிந்த பாக்கர், தம் இல்லிற்கு வருவார். கால் வெள்ளியை மனைவியிடம் தருவார். கால் வெள்ளிக்கு மூங்கில் வாங்குவார். மிச்சமான அரை வெள்ளியை, வீதியை நோக்கி வீசி எறிவார். கல கல என்று நகைப்பார்.

அவர் துணைவி, பதியின் உணர்விற் பயிற்சி யடைந்தவர்: கை வந்த கால் வெள்ளிக்கு உரிய அளவு உணவு சமைப்பார்.

சந்தைபோல் கூடி, சதுரங்கம் ஆடியபின்,
நிந்தை மரணநிலை நிச்சயத்தை எண்ணிலமே.

உவந்து இருவரும் உண்பர். தியானம் எனும் பெயரால், ஏகமுகம் ஆகி யிருப்பர். நாள்தோறும் அவர்கள் நடையிது. இவ்வரலாற்றின்படி, ஏறக்குறைய எவர் இல்லத்தும், பாக்கர் முறங்களே பழக்கத்தில் இருந்தன. இலவசமாக முறம்தரும் அவர்மேல், பாவையர் எவர்க்கும் பாசம் இருந்தது.

வித்தகப் பாக்கர், ஒருநாள் வீட்டை விட்டு வெளிப் பட்டார். நடு வீதியில் நடந்தார். ஒரு வீட்டெதிரில் நின்றார். அவர் நிற்பதை, அந்த இல்லத் தலைவி யறிந்தாள். விரைந்து வந்தாள்.

பாக்கா! என்ன செய்தி? என்று, பரிவொடு வினவினள் அந்தப் பாவை.

அம்மணீ! அடியேன் மனையில் ஒரு அலுவல். பாகம் செய்ய, சில பாத்திரங்கள் தேவை என்றார்.

இனத்தில் பாக்கர் இழிந்தவர். அவரிடம் பாத்திரங்களை எப்படி அளிப்பது? உபகாரியான அவர்க்கு, இல்லை யென் பதும் நல்லது அல்லவே என்று, எண்ணுதும் எண்ணினள். முன் யோசனை செய்து ஒரு முடிவிற்கு வந்தாள். ஓட்டைகள், கலாய் இல்லாதவை என்றிருந்த சிலவற்றை, எடுத்துக் கொடுத்தாள்.

அடுத்த வீடு, எதிர் மாளிகை, பக்கத்து இல்லம் ஆகியவைகளிலும், இப்படியே கேட்டுக் கேட்டு, பல பாத்தி ரங்களை வாங்கிச் சென்றார் பாக்கர். பாகச் செயலிற்கு, ஒன்றுகூட பயன்படாது.

சுயநலத்தில் உலகம் சுழிக்கும்; எனினும், உதட்டில் காட்டும் உறவு, அதிக வியப்பாக இருக்கும். ஆம். இது தான் உலகம். அடபாவமே!

உடல்கரணம் தந்தாய், ஒளிந்தறிவுள் நின்றாய்,
கடவுள் பெருமா!என் கண்காண வாராயே!

இரண்டு நாள்கட்குப் பின், வாங்கிச் சென்ற பாத்திரங்களை, பாக்கர் அவரவர் வீடுகட்கு முறையே திருப்பி அனுப்பினர்.

ஓட்டை சில்லி ஒன்றிலும் இல்லை, புதுப் பாத்திரங்கள் போல், எல்லாம் கலாய் பூசப் பெற்றுள. அது மட்டுமா! தவலை தந்தார்க்கு, அதனமேல் ஒரு செம்பு. அண்டா தந்தார்க்கு, அதன் மேல் ஒரு தட்டு. பெரிய பாத்திரங்கள் ஒவ்வொன்றிற்கும், துணையாக ஒவ்வொரு சிறிய பாத்திரம் உடன் வந்திருந்தது.

என்ன பாக்கா! பாத்திரங்கள் அனைத்தையும் பழுது பார்த்தனையா? பேஷ். அரிய உன் மனம்போல், யாவும் அழகா யிருக்கின்றனவே!

அது சரி. இவைகள் எங்களுடையவை! இவைகளுடன் வேறு வேறு பாத்திரங்களும் இருக்கின்றனவே. இவைகள் எம்முடையன அல்லவே. பாத்திரக்காரர்களைப் பார்த்து, கொண்டு போய் முன்னே கொடுத்து விடு என்று, கோதையர் அனைவரும் கூறினர்.

என்பால் ஒன்றும் ஏமாற்றம் இல்லை. உதவிய பழையன ஒவ்வொன்றும், பகலில் பணிக்குப் பயன்பட்டன. இரவில் ஓய்வு கொண்ட அவைகள், சலசலப்பின்றித் தம்முள் சந்தித்தன. விடிவதற்குள், கூட்டத்தின் பயனாகக் குட்டிகள் போட்டன என்று, பாக்கர் குறுநகை செய்து கூறினர். கோதையர் அது கேட்டுக் குலுங்கச் சிரித்தனர். பாத்திரங்களை எடுத்துப் பத்திரமாக வையுங்கள்! வருகிறேன் என்று, அங்கிருந்து பாக்கர் அகன்றார்.

பயனான இச்செய்தி, ஊர் முழுதும் பரவியது. வேண்டுமென்றே பாக்கர், விலை கொடுத்து வாங்கி யிருக்கிறார். குட்டி

அன்னை அனையவுனே, அனபின் தழுவாமல்,
சின்னமனம் கொண்டேன், சிரித்தேன், ஏமாந்தேனே.

போட்டன என்று கொடுத்திருக்கிறார் என, அவரது பரம உபகாரத்தை யாவரும் பாராட்டினர். இடையில், உருண்டு ஆறு மாதங்கள் ஓடின.

முன்னர் பாத்திரம் அளித்த பாவையர்கள் தலை வாயில்களில், ஒரு நாள், மீட்டும் பாக்கர் தோன்றினார். தாய்மையீர்! அடுத்து ஒரு அலுவல். பாத்திரம் தேவை என்றார்.

குட்டி போட்டுக் கூடி வரும் எனும் எண்ணத்தால், ஊர் மாதர்கள், உள்ள பாத்திரங்களை எல்லாம் உதவினர். பாக்கர் நகைத்தார். எடுத்து வண்டிகளில் ஏராளமாக ஏற்றினார். கொண்டு சென்றார்.

ஒரு வாரம் ஆகியும், சென்றவை திரும்பவில்லை. வீட்டில் புழங்க, எந்தப் பாத்திரமும் இல்லை. அரிவையர் பலரும் அங்கலாய்த்தனர். என்ன செய்தி? அறிந்து வருமாறு சில ஆள்களை ஏவினர். பாக்கனார் இல்லை. குடிசையில், இனிய அவர் துணைவியார் மட்டும் இருந்தார்.

எங்கே அம்மா பாக்கர்? என்று, விறுவிறுத்து வந்தவர் வினவினர்.

ஐயோ! அந்தக் கொள்ளையை ஏன் கேட்கிறீர்கள்! கொணடு வந்த பாத்திரங்களை, போய்க் கொடுக்க இருந்தார். எதிர்பாரா விதமாக, அவைகட்குக் காலரா நோய் கண்டது. ஓரே இரவில் எல்லாம் இறந்தன. பதைத்தார் அழுதார் பாக்கனார். என்ன செய்வது என்று ஒன்றுமே தோன்றவில்லை. தகனம் நடத்தினார். நேற்றுத்தான் பால் தெளிப்பும் நடந்தது. பாக்கர்க்கோ கவலை மிகுதியால் பயித்தியம் பிடித்து விட்டது. எங்கு சென்றாரோ? இப்போதைய மன நிலையில் என்ன நேருமோ என்று, கண்ணீர் பெருக்கிக் கதறினார்.

என்னையே நானறியேன்; இந்நிலையில், மற்றோர்க்கு
நின்பெருமை பேசவைத்த நீள்கருணை வாழியரோ.

விசாரிக்க வந்தவர்கள் வியந்தனர். ஓடினர். ஊரவரிடம் செய்தியை உரைத்தனர்.

என்ன விபரீதமான பேச்சு இது ! உபகாரிபோல நடந்தது எல்லாம் வெறும் நடிப்புத்தான் ; நம்மை ஏய்க்கத்தான் என்று எண்ணினர். இனியும் மறைப்பது கூடாது என்று, அவரவர் தம் கணவரிடம், கொஞ்சம் கொஞ்சமாகச் செய்திகளைக் கூறினர்.

ஆடவர்கட்கு, ஆத்திரம் பிறந்தது. கனன்ற சீற்றத்தைக் கட்டுப் படுத்தினர். திருவஞ்சைக் களத்தைத் தலைநகராக்கி, அந்நாளில் மலைநாட்டை ஆள்பவர் சேரமான் பெருமாள். ஊரார் திரண்டனர். வேந்தரிடம் இது குறித்து விண்ணப்பித்தனர்.

பாக்கர், சிறந்த யோக சித்தர். சிற்சபேசர் சிலம்பொலி கேட்ட பின்னரே, தியானம் கலைபவர் மன்னர். பாம்பின் கால் பாம்பறியும். பாக்கர் சாதனையைப் பார்த்திபர் அறிவர். எனினும், விசாரணை செய்ய வேண்டும். அது தானே நியதி.

அரசர் ஏவிய ஆள், பாக்கரை அழைத்து வந்தான். மானசிக வணக்கம் செய்து, மன்னர் அவரை வரவேற்றார். பாக்கரே ! பாத்திரங்கட்கு ஆத்திரம் அதிகம் ; என்ன ஆயிற்று விஷயம் என்று நுட்பமாக வினவினர்.

மன்னர் பெருமா ! முன்னொரு சமயம் வாங்கினேன். அவைகளை, முறை தவறாமல் திருப்பி யளித்தேன் ; உண்மை தானா என்று, ஊராரையே கேளுங்கள் !

கொடுத்த பாத்திரங்களை, குட்டி போட்டன என்று திருப்பி கொடுத்தார். அடுத்து வாங்கியவைகளைத் திருப்பி யளித்திலர். காலரா கண்டு இறந்தன என்று கதை கட்டு

உருவை எழுப்பி, உயிரைப் புகுத்தி,
கருடி அநுபவத்தைக் காணவைத்தாய் எந்தாயே

கிறார். ஆசை காட்டி மோசம் செய்த அநியாயக்காரர் என்று, குடிகள் ஆத்திரம் கொண்டு கூவினர்.

அரசே! மோச நினைவினர் நாசம் ஆவர். அவைகளை என் அனுபவத்தில் அறிந்துளன். பிறந்தன இறக்கும்; இறந்தன பிறக்கும். இது எங்குமுள்ள அனுபவம். அன்று, கூடிய பாத்திரங்கள் குட்டி போட்டன. வாழும் காலம்வரை வாழ்ந்த அவைகள், இன்று ஒரு சேர இறந்தன. இறப்பும் பிறப்பும் இயற்கை தானே!

நரேந்திரர் அது கேட்டு நகைத்தார். அதன்பின் தனியே பாக்கரொடு அளவளாவினார்.

பாக்கரே! பாகம் கைவந்தவர் நீர். அரை வேக்காடும், கால் வேக்காடும் ஆனவர்கள் மக்கள். இவர்கட்கு எவரும் கை கொடுக்க முடியாது. அவரவர்கள், தெரிந்தோ தெரியாமலோ செய்துவரும் புண்ணியங்கள் திரளும். அவைகளால், பயனுன ஒளி அறிவில் படரும். அதற்கு முன், ஆன்ம ரகஸ்யங்களை வெளிப்படையாக அறிவிப்பது வீண். பேதையர் ஞானிகளைப் பின்பற்ற முடியுமா? ஆசி செய்யுங்கள்! அவர் கட்கு, தங்களது பரம அருள் நோக்கத்தைப் பாலியுங்கள்! அவை, வாழும் வழியை வகுக்கும் என்று அறிவித்தார் அரசர்.

உண்மைதான். தூய்மை யற்ற பாத்திரங்களைத் துலக்க நினைத்தேன். அசத்துக்களை, சத்துக்கள் ஆக்க ஆவதில்லை என்று பாக்கர் அறிந்தார். அப்போதே மக்கள் கண்கட்குத் தெரியாதபடி மறைந்தார். அதுகண்ட அனைவரும், ஆ! ஆ! என்று அதிர்ந்தனர். தவருகப் பாக்கரை மதித்தோமே என்று தவித்தனர்.

இதனில் அதிசயம் ஒன்றும் இல்லை. இப்படி ஏதாயினும் ஒரு வித்தை காட்டினுல்தான், மகான்களை உலகம் மதிக்கிறது.

வாழ்க்கை முறையில் வழிதவறிப் போகாமல்,
தாழ்க்கையே இன்றித், தடுத்தாண்டு கொள்ளாயே.

இது மிகமிக மட்ட ரகம். சிவஞானம் வேறு; சித்து விளையாடு தல் வேறு. தங்கம் செய்து தருவர்; என்றும் இளமை எய்த வைப்பர் என்று, பேதைத் தனமாக, அவர்களை எதிர்பார்ப்பது பிழை. அருள் ஞானத்தை ஆவலித்தால், ஆன்ம லாபம் சித்திக்கும்.

போன பாத்திரங்கள் திரும்பிவரும். நீங்கள் முதலில் சத்பாத்திரங்களாக முயலுங்கள் என்று, அறிவுரை கூறி அரசர் அனுப்பினர்.

குடிகள் ஒவ்வொருவரும், வருந்திய மனத்தொடு தம்தம் இல்லம் திரும்பினர். அரசர் அறிவித்தபடி, எவர் பாத்திரங் களும், அவரவர் மாளிகையில் எய்தி யிருந்தன. எனினும் அவைகள், இப்போது குட்டிபோட்டு இல்லை.

வியந்தனர். எப்படி இவைகள் வந்தன என்று, விறு விறுத்துத் தம் தம் துணைவியரை வினவினர். இப்படி வந்தன என்று எப்படிச் சொல்வது? அவர்களும் இது அதிசயம் என்றனர். பாக்கரும், அவர் துணைவியும், அன்று முதல் எவர் கண்கட்கும் அகப்படவில்லை.

வாழ்க சித்தர்கள் வழிமுறை !

ஓம்.

அருணகிரிநாத சுவாமிகள்

(தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை, M. A.)

[மருத்துவக்குடி முதல் சிவபுரம் வரை]

மருத்துவக்குடியில் (60) மால் மருகனை வணங்கிக் "கருத்திதப்படு" எனத் தொடங்கும் திருப்புகழ்ப் பாடலை (853) பாடி வணங்கினர். பின்னர் மூவர் தேவாரமும் பெற்ற பிரபல ஸ்தலமான திருவிடைமருதூரை (61) அடைந்

பால்மணம் மாறாப் பருவத்தில், மெய்ம்மைஅருள்
நூல்மணம்போல், என்னுணர்வில் நோன்பிருக்கச் செய்தாயே.

தார். இத்தலம் வரகுண பாண்டியருடைய பிரம அத்தியைப் போக்கின தலம். "தென்னர் கோமகன் பிரமசாயை குறைத்தது இப் பதி" திருவிளை-அருச்சனை (25.) அவர் அநேக தொண்டுகள் செய்து முத்தி பெற்ற தலம். பதினொரு கோடி உருத்திரர் வழிபட்ட தலம். "ஒத்த சிந்தையராய்ப் பதினொரு கோடி உருத்திரர் வழிபடு மருது"—பழநித் தலபுராணம் வராக கிரி (6)

சாம கண்டத்தன் சிவபெருமான், தன்னைத்தான் அருச்சித்த புநித தலம். இத்தலத்தின் தெருவுதோறும் அருணகிரியார் விழுந்து வணங்கி எழுந்து கந்தவேளின் சந்நிதியை அடைந்து பெரியவர் (மகாலிங்கேசுவரர்) வீற்றிருக்கும் அப் பெரிய தலத்திற்குப் பெரிய பாடல் பாடவேண்டும் என விரும்பி, "அறுகுநுனி" என்னும் பெரிய அருமைப் பாடலைப் பாடினர் (862). அப்பதிகத்தில் வாழ்க்கைத் துன்பங்களை விளக்கி *"இத்தகைய இழிவான வாழ்வு உனது அடியார்கள்* பெறுவது என்றால் உலகம் உன்னை ஏசிடாதோ! பாசநாசனே எனத் தம்மை ஆண்ட *பிரானிடம் விண்ணப்பித்தார்."* இத்தகைய வாழ்க்கை *வருணனையை*

"மானிட வாழ்வே வாழ்வென நொந்து
விறகிடமூடி, யழல் கொடு போட
வெந்து விழுந்து முறிந்து நிணங்கள்
உருகி எலும்பு கருகி யடங்கி
ஓர்பிடி நீறு மிலாத உடம்பை
நம்பும் அடியேனை இனி யாளுமே"

எனப் பட்டினத்தார் உடற்கூற்று வண்ணத்திற் காணலாகும். இத்தலத்துத் திருப்புகழில் (862) முருகவேளை 'ஏகநாயகா' என்கிறார். இது,

---

மடமைக் கடலில் மயங்கி யழுந்திக்,
கடமை மறந்தேன்முன், கண்ணருளைச் செய்யாயே.

"தேறுபுகழ் இடை மருதில் உறை ஏகநாயகன்
செய்ய தாளும்"

எனவரும் மருதவனப் புராணத்தை நினைவூட்டுகின்றது.

"எனக்குந் தவநெறி வேண்டும்" (864) "சிவஞான போதகம் வேண்டும்" (865) குருநாதனே என விண்ணப்பித்தார். பின்னும் நான் உன்மீது 'மதுரகவி' பாடவேண்டும். பேரின்பம் தரும் அறிவைப் பெறவேண்டும். அரிய தமிழ் ஓசை ததும்பும் ஒளி வசனம் என் வாக்கினின்றும் வருகின்ற வழிபாட்டிற் கூடுதல் வேண்டும். இங்ஙனம் அருள் புரிதி" எனப் பொருள் படும்படி—

"மதுரகவி யடைவு பாடி வீடறிவு
முதிர அரிய தமிழோசை யாக ஒளி
வசன முடைய வழிபாடு சேரும் அருள் தந்திடாதோ.
(863)

எனப் பாடிப் பணிந்தார்.

முருகவேளுக்கு மயிலுடன் (பிணிமுகம்) என்னும் யானை வாகனமும் உண்டு என்பதை "செழுமதகரி நீலகோமள அபிநவமயில் ஏறுசேவக! செய செய முருகா குகா வளர் கந்த வேளே" என வரும் திருப்புகழ் (865) விளக்குகின்றது. திருவிடை மருதூரை விட்டு அருகிலுள்ள 'திரிபுவனம்' (62) என்னும் தலத்தை அடைந்தார். திரிபுவனம் ஒரு தேவார வைப்புத் தலம். அத்தலத்துத் திருப்புகழில் [866] முருகவேளை சித்தர்களின் தம்பிரான் எனப் போற்றி, அங்கிருந்து புறப்பட்டு திருப்பனந்தாள் என்னும் தலத்தை [63] அடைந்தார். அங்கு முருகவேளின் சந்நிதியை அடைந்து, கண்ணீர் பெருக நின்று—"கொந்தார் மைக்குழல்" என்னும் பாடலைப் பாடினர் (861); அப்பாடலில் "உன்மனச் சுழற்சியை

அனுபவங்கள் இல்லார் அறிவுரைகள் கேட்டு,
மனுடமனம் தேயார்க்கு மன்னருள்பா லித்தாயே.

விறுத்தவல்ல ஒரு அற்புதப் பொருள் இந்தா! என அளித் தருள்வாய். "மங்கா நற்பொருள் இந்தா அற்புதம் என்றே இப்படி அருள்வாயே" என வேண்டித் துதித்தனர். இங்ஙனம் அவர் முருக வேளிடம் கேட்டவரம் பின்னர் அவருக்குக் கிடைத்தது என்பது, "வள்ளிகோன் அன்று எனக்கு உபதே சித்தது ஒன்று உண்டு கூறவற்றே" எனவரும் கந்தர் அலங் காரத்தால் (9) பெறப்படுகின்றது.

திருப்பனந்தாளை விட்டுக் கும்பகோணத்தை (64) அடைந் தார். அற்புதத் திருப்புகழே பாடவேண்டும் என்னுங் கருத்தே நிறைந்தவராய்க் "கும்பகோணத்திற் பெருமாளே! செஞ் சொல்சேர் சித்திரத் தமிழாலுன் செம்பொனூர்வத்தைப் பெறு வேனே" (870) எனச் சித்திரத் தமிழ்பாடும் விருப்பினை செந் தமிழ்க் கடவுளின் சந்நிதியில் வெளியிட்டார். காலையில் எழுந்ததும் இறைவன் திருநாமத்தைக் கூறவேண்டும் என்னும் உபதேசத்தைக் "காலையி லெழுந்துன் நாமமெ மொழிந்து காதலுமை மைந்த என ஓதி" (871) என்னும் பாடல் அடியில் விளக்கி யருளினுர். கும்பகோணததில் உள்ள சோமீச்சுரத்தை (65) வணங்கிக் கரிய குழல் எனத் துவக்கும் அருமைத் திருப்புகழைப் பாடினர் (874). இப் பாடலில் உள்ள

"இரவினிடை துயிலுகினும் யாரோடு பேசுகினும்
இளமையும் உன்அழகுபுனே ஈராறு தோள்நிரையும்
இருபதமும் அறுமுகமும் யானேத ஞானமதை
யருள்வாயே"

எனவரும் நான்காவது அடி மனப்பாடத்துக்கு உரியது.

பின்னர், கும்பகோணத்தில் உள்ள 'பெரிய மடத்து' முருக வேளைத் தரிசித்து வணங்கினுர். இம் மடத்தைப் பற்றிய விவரத்தைத் திருவாரூர் (44) என்னும் தலத்தைப் பற்றின

பகல்வேடம் இட்டுப, பணத்திமிரால் பாழாம்
இகலினரைக் கண்டேன், இடிந்துமனம் நைந்ததுவே.

விளக்கத்திற் காணலாகும். சோமீச்சரத்தைத் தரிசித்த பின்பு "குரங்காடுதுறை" என்னும் தலத்தை (66) அடைந்து மூன்று திருப்புகழ்ப் பாடல்களை [883—885) பாடினர். 883 பாடலில் இராமபிரான் சீதையைச் சிறையினின்றும் மீட்ட வரலாறு கூறப்பட்டுள்ளது; 885 பாடல் 'வடகுரங்காடு துறை, தென் குரங்காடுதுறை' என்னும் இரண்டு தலங்களைச் சேர்த்து பாடிய பாடலாகும். "குரங்கு குதித்தாடு தலங்கள் இசைப்பான பெருமாளே" என வருவது காண்க; 'தலங்கள் இசைப்பான' என்பதற்குப் பதிலாகத தடம் கதலிக்கான பெருமாளே' என ஒரு பாடபேதம் உண்டு. 'கதலிக்கானம்' என்பது திருக்கழுக்குன்றம். அப் பாடத்தின்படி "குடங்கள் நிரைத்து ஏறு" எனவரும் 885 பாடல் திருக்கழுக்குன்றத் திற்கு உரியதாகும்

பின்னர் 'சிவபுரம்' (67) என்னும் தலத்தை அடைந்து "மனம்" எனத் துவக்கும் (876) திருப்புகழைப பாடினர். அப்பதிகத்தில் அசுரரை அழிக்கச் சிவபெருமான் வேல் தநதனர். "சிவன் உகநதருள் கூர்தரு வேல்விடு முருகோனே" எனக் கூறி உள்ளார். ஆனால், 'கொம்பனையார்' எனனும் பாடலில் (66) தேவி வேல் தந்ததாகக் கூறி உள்ளார். கநத புராணத்தில் சிவபிரான் வேல் தந்ததாகக கூறப்பட்டுள்ளது.

"எப்படைக்கும் நாயக மாவதொரு தனிச்சுடர்வேல்
நல்கியே மதலை கைக் கொடுத்தான்"

கந்தபுராணம் 1—18—38.

சிவபுரம் என்னும் தலத்து ஆலயத்தைத் 'திருமடந்தையர் நாலிருவோர் நிறை அகமொ டம்பொனி ஞலயம்' என விளக்கி யுள்ளார். திருமடந்தையர் நாலிருவோர் அஷ்டலக்ஷ்மிகள். [1. தனலக்ஷ்மி, 2. தானிய லக்ஷ்மி, 3. தைரிய லக்ஷ்மி, 4. வீரலக்ஷ்மி, 5. வித்தியா லக்ஷ்மி, 6. கீர்ததி லக்ஷ்மி, 7. விஜயலக்ஷ்மி, 8. ராஜ்யலக்ஷ்மி.

என்மனம், பன்முறையா எத்தனைதான் சொன்னாலும்,
தன்னுருவம் காட்டி, யெனைத் தள்ளாடச் செய்கிறதே.

சமரசம் 29

வாழும் காலம் வரும்

[அன்பன்.]

ஆதிபுரீசர் ஆலயத்தில், அன்பர்கள் கூடினர். ஓதுகிறார் பௌராணிகர். சிறந்த அடியவர்கள் சிரவணம் செய்கிறார்கள். இரவு மணி ஒன்பது.

" கடும் தவம் செய்யும் மார்க்கண்டேயரை, கடுகடுத்துப் பற்ற வந்தான் காலன். மரணத்தை அஞ்சிய மார்க்கண்டேயர், அபயம்! பிரபோ அபயம் என்று, தற்பர இலிங்கத்தைத் தழுவினர். அச் சூழ்நிலை கண்டும் அந்தகன் அஞ்சிலன். பாசம் வீசி அவரைப் பற்ற முயன்றான்.

பார்த்துப் பொறுத்திலர் பரமர். இலிங்கத்தில் இருந்து எழுந்தார். காலனைக் காலால் உதைத்தார். இறப்பளிக்கும் இயமன் இறந்தான்.

மார்க்கண்டேயா ! இன்று முதல் நீ சிரஞ்ஜீவியாக இரு என்று, ஓதி உருக்கரந்தார் உமாபதி.

" மெய்யன்பர்களே ! இவைகளால் நாம் அறிவது யாது ? காலத்தை வென்றவன் கண்ணுதல் பரமன். அப்பெருமான் திருவடிகளை, நம்பினவர் முன் நமன் அணுகான். நாம் அந்த நம்பனை நம்புவம். ஏத்திப் போற்றி இறைஞ்சுவம். அதன் விளைவாக, பேரான திருவருளைப் பெறுவம். என்றும் இன்புற்று இருப்பம் !"

" சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை ;
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை "

என்று புறவுரை, புனித அகவுரை ஆதிய நயம் தோன்ற நடந்த விரிவுரை, பெருகி நிறைவு பெற்றது.

துன்பக்கா டாகித் துவண்டதெலாம் போதும்; இனி
இன்ப அருள்நிழலில், என்னை வை எம்மானே!

சிரவணிப்பவர்போல் இருந்த ஒருவர், சிலிர்த்து எழுந்தார்.

" இதுவரை நிகழ்ந்த விரிவுரை, ஒரு காசுக்கும் உதவாத கட்டுக் கதை. மெய்யென்னும் மெருகு பூசிய போலியான பொய்க்கதை " என்று, கரிந்து பொரிந்து கர்ஜித்தார்.

சிவசிவ ! என்ன இது ! யார் ஐயா நீர் ? என்று எழுந்தார்கள் சில அன்பர்கள்.

இப் புறத்தில், ம். உம் என்று உறுமி எழுந்தனர் ஒரு சிலர். பல நூல்களைப் பயின்று தேர்ந்த பாகவதர் ஆய்வைப் பொறுத்துப் பாருங்கள் ! அமருங்கள் ! எல்லோரும் அமருங்கள் என்று, அதட்டி அனைவரையும் அமரச் செய்தனர்.

பன்னிரு நாமம் தரித்த பரமபாகவதர், அதன்பின் திருவாய் மலர்ந்தருள்வது ஆயினர். சிரவணத்தில் எவர்க்கும் சிந்தனை சென்றது.

" பக்த மார்க்கண்டேயரை, இயமன் பற்ற வந்தது உண்மை. அவனை சீறித் தடுத்தார் சிவபெருமான். காலன் கனன்றான். கண்ணுதலுக்கும் அவனுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. சூலாயுதரிடம் சோர்வு பிறந்தது. ஆத்திரம் கொண்ட அந்தகன், தன் தண்டாயுதத்தை எடுத்தான். சிவனார் தலையில் மோதி அடித்தான். உடைந்து புரண்டது அவர் சிரம்.

பதியின் நிலையறிந்த பார்வதி, நாரணா ! உலகமுண்ட காரணா ! பக்தவற்சலா ! லட்சுமீதரா என்று, கூவி யழுது குமுறினள்.

விஷ்ணு மூர்த்தி வெளிப்பட்டார். புதுக்கிய ஒரு தலையை சிவனார் உடலில் பொருத்தினார். இச் சம்பவம் கண்டு, ஓடி அந்தகன் ஒளித்தான்.

பேயாட்டம், நோயாட்டம், பெண்ணாட்டம் ஆகி, உடல்
சாயாட்டம் நேர்முன், சதுராட்டம் காட்டாயோ?

இறந்து பிழைத்த சிவபிரான், மார்க்கண்டேயனை, திருமால் திருவடியிற் கிடத்தி, மாதவா! கேசவா! இப்பிள்ளைக்கு இரவா வரம் தா என்று இறைஞ்சினார்.

அப்படியே மார்க்கண்டேயா! என்றும் நீ சிரஞ்ஜீவியாயிரு என்றார் திருமால். இதுதான் உண்மையான வரலாறு. இறந்து பிழைக்கும் சிவனுக்கு, ஒருவனுக்கு இறவா வரமளிக்க இயலுமா? இது எங்கள் கூரத்தாழ்வார் சொன்ன குறிப்பு" என்று, குதித்து சபையில் கோர தாண்டவம் செய்து கொக்கரித்தார் பாகவதர்.

படைபலம், பணபலம், தோள்பலம், வாய் வாதபலம் வாய்த்த அவரை, எவரும் அன்று எதிர்த்திலர். எனினும், இந்த அக்கிரமத்தையும் சிரவணிக்க நேர்ந்ததே என்று, கண்ணீர் சிந்திப் பலர் கலங்கினர்.

சூழ்ச்சி மிகுந்த அசுரர்கள், ஒரு காலத்தில் தாமோதரர் தலையைத் தள்ளினர். அழுது கதறிய அலைமகள், திருவாரூரில் வரத தியாகராஜரை வழிபட்டாள்.

பிரசன்னரான அப்பிரான், இறந்த மணிவண்ணரை எழுப்பினர். மலர்மகள், அன்று முதல் மங்கலை ஆயினள். சரியோ தவறோ இப்படி ஒரு வரலாறு இருக்கிறது அல்லவா!' அதைப் படித்துவிட்டு, பிறகு இவ்வுருவில் ஒரு கதை எழுந்தது என்று, பேசி வருந்தினர் பிறர்.

அந்த வரலாறும் இந்த வரலாறும் என்று மறைகிறதோ, அன்றுதான் ஆஸ்திகத்தின் புனித ஜீவன் பொலிவு பெறும் என்று, நல்லவர்கள் அன்று நடுங்கினர். இது நடந்து முப்பது ஆண்டுகள் ஆயின.

குரங்கினது சேட்டைகள் கொண்டமனை வாழ்வில்,
இரங்கியருள்! என்றன்னை ஏன்றருள்நீ எந்தாயே.

திரிகரணத்தாலும், மோசமான சமய மோதல் அன்று இருந்தது. சில இடத்தில், இன்றும் அச்சழக்குச் சேறு இருக்கிறது.

மார்க்கண்டேயர் ஒருவர் அல்லர்; கற்ப பேதங்களால், அவர் வரலாறுகள் அளவிறந்தன.

சிவத்தை வழிபட்டு, திருமாலைச் சேவித்து, அந்த இரு முதல்களையும் அபேத நிலையில் அனுபவிக்கும் மார்க்கண்டேயர், சிறந்த தம் வரலாற்றைச் சிதைக்கும் ஆஸ்திகப் போர் வையரைக் கண்டு அழுங்குவது இயற்கை. இப்படி எத்தனையோ மோதல்கள் இருக்கின்றன. அட பாவமே!

மணியும் ஒளியும், மலரும் மணமும், கனியும் சுவையும் போல்வது சிவ விஷ்ணு செய்தி. பழைய நூற்கள் சில, தட்ப வெப்ப தெய்வ சக்தியில், இப்படிப் பேதச் செய்திகளைப் பேசியது உண்டு. அவரவர் மனநிலைக்குத் தக்கபடி, ஏதாயினும் ஒன்றில் உரம்பெறும் உணர்வு என்பது, நூற்களின் நோக்கம். நூல் நுட்பம் ஓர்ந்தார்க்கு, அவைகளின் பேச்சில் பன்மை; உணர்வில் ஒருமை என்பது தெரிதலுறும்.

சிவனடியவரும், திருமால் அடியாரும், வைதிக சமய வாழ்வினர். அவரவர் அனுட்டானத்தை, அவரவர் தவறாமை அறம். முயலும் வழிபாடு முழுமை பெறும் பருவத்தில், இயற்கையான இருள் மலம், போகிறேன் என்று சொல்லாதே போய்விடும். அதன்பின், விகற்ப ஞானம் விலகிவிடும். அபேத நிலையில், சிவத்தில் திருமால்; மாலில் சிவம் என்று அறிந்து மகிழும் ஆன்மா.

உயர்ந்த நூற்களை ஓத வேண்டும். ஓதியதை உணரவேண்டும். உணர்ந்ததை அனுபவத்தில் கொண்டுவர, உதவுநர்

பற்றிக்கொள், என்னையிந்தப் பாரில் இராமலெனச்
சுற்றுகின்றேன் நின்கோயில், தூயபரா! ஏலாயே!

நட்பைப் பெற வேண்டும். இந்நாளில், இங்ஙனம் எண்ணுநர் தொகையும் அருகியது.

ஆன்ம ரகஸ்யத்தை அறிவிக்காத, அறிந்து கொள்ள ஆவலிக்காத விரிவுரை மேடைகள் பெருகின.

உணர்வொழுக்க நெறிகளில் ஒட்டாது பற்றாது ஒதுங்குபவர், நிமல சமயங் குறித்து எழுதுவதும் பேசுவதும் நிரம்பிய இந்நாளில், உண்மையில் தெய்வீகம் உருக்கரந்தே இருக்கிறது.

மனசாட்சி இருளடைந்த வாழ்க்கையில், எப்புறம் திரும்பினாலும் ஏதமான சூழ்நிலை. இந்த அழகில், நினைவாலும் உரையாலும் புனித தெய்வத்தைப் புறம் ஒதுக்குவாரைக் கண்டு இயற்கை கலங்குகிறது. அந்த விளைவுதான், இன்று குமுறுகிற உலகக் கொந்தளிப்பு.

அருள் நூற்களை உரை செய்ய அறிவது வேறு; குறிப்புணர்ந்து முயன்று, இந்த அனுபவம் இன்னும் கைவல்யம் ஆகவில்லையே என்று, முதல்வன் திருமுன் முறையிட்டு அழுது கதறுவது வேறு. இக் கதறல்கள்தான், தேவார திருப்புகழாதிய திருமுறைகள்; திவ்யப் பிரபந்தம் முதலியவைகள்.

உணர்வின ஒழுக்கம் புறம்பாகி, உரை செய்து ஆரவாரிப்பாரை, அறியாமை வாதிகள் அறிகிறார்கள். மதியுடையோர் குழப்பிய மதவாதக் குப்பைகளை, நெடுக எடுத்து மடியில் நிரப்பிக் கொள்கிறார்கள்.

வெள்ளைத் தாள்களைக் கருப்பாக்கும் ஏடுகளில், சமய நிந்தைச் சரக்கை நிரப்புகின்றனர். ஏறிய மேடைகளிலும் இந்த ஏக வெடியை எழுப்புகின்றனர். இந்த நாஸ்திக விரிவுரைகளுக்குக் காரணர் யார்? ஏறக்குறைய சில ஆண்டுகட்கு முன்பிருந்த பசுத்தோல் போர்த்த ஒரு சிலர்தான். இவர்

அன்பும் அறமும் நிறைந்த மனையுறத்தில்,
வன்பறியா மக்கள், வளருமா செய்யாயோ?

களால் விளைந்துள இன்றைய விபரீதங்களை, நினைக்க நெஞ்சு நோகிறதே! தெய்வமே! நீயே துணை என்று தேம்பி யழுவது தவிர, வேறு செய்வது யாது என்று விளங்கவில்லையே!

காலையில் எழுவம். கடனை முடிப்பம். நீராடுவம். அனுட்டிப்பம். உலக கொந்தளிப்பில், ஒட்டாது பற்றாது ஒதுங்குவம். பரமன் புகழைப் பாடுவம்.

நாத ரூப நம்பா! தெளிவாம் சத்தியத் தெய்வமே! அகத்தும் புறத்தும் அமைதி பிறக்க, அறிவில் இருக்கும் இருளகல, உணர்வில் மெய்ம்மை ஒளி வீச, பெருகும் ஒரு அருளாடல் பிறவாதா? என்று வீரிட்டுக் கூவி, சிவசிவ என்று சிந்திப்பம்; ஹரிஹரி என்று வந்திப்பம். இன்றைய உலகில் இவ்வளவு போதும்!

அநியாயத் தம் தவறுகளை ஒவ்வொருவரும் அறிந்து, சமுதாய வாழ்வில் எவர்மேலும் பிழைகளை ஏற்றாமல், சமய வாழ்க்கையில் சரியாமல், நியதியில் நிலைப்பம். நம்பன் அருளால, உலகம் உய்யும் காலம் வரும் என்று, நம்பி எதிர் பார்ப்பம் நாம்!

வாழ்க சமரசம்.

ஓம்.

VISVAVASU AND THE UNFAILING TORCH

Visvavasu is just emerging, even as Krothi is fast running out. The continent of India has sustained great trials in the passing year. From Badrinath to Pamban, from Kashmir to Assam, there has been a continuous crisis of displacement and destruction. For all the

ills that may sweep over the waves of time all-over. the *unerring recipe that* has saved humanity from suffering destruction, is universal love of service to mankind and to the all-life. In the eternal awareness of God, all about and everywhere, in the realisation of the temple of God in every life, in the realisation that the most effective worship of the Supreme is service to the Lord in the creative structure of life, one can realise how a Jeeva can claim to live, move and have his being in God.

Mind can magnetise mortality into immortality The exercise of this function is Japa or Bhajan The new year is ever new, for the Lord lives in time. Hence, spread your mind all over in time and space in the thought of the Lord. Here is the unfailing torch of deliverance from plurality to the unity, peace and *beneficience of the One Lord.*

"Om Hrim Namasivaya
Om Namo Narayanaya"
"Om Saravana Bavaya
Om Shanmuga Ghuhaya"

—*Thiruppugal Mani.*

அமிர்தவசனி பிரசுரங்கள்

54, பந்தர் தெரு, சென்னை-1.

குகஸ்ரீ ரசபதி அவர்களின் விரிவுரையுடன்

அரிய அருள் நூல்கள்		ரூ.	பை.
கந்தரநுபூதி	(விரிவுரை)...	1	25
திருவகுப்பு (6 மட்டும்)	,, ...	1	50
திருச்செந்தூர் பிள்ளைத்தமிழ்	,, ...	2	00
கந்தர் கலிவெண்பா	,, ...	2	00
திருக்கயிலாய ஞானவுலா	,, ...	2	00
விநாயகர் அகவல்(ஔவையார்)	,, ...	1	50
கோளறு பதிகம்	,, ...	0	40
திருப்புகழ்மாலை (360பாடல்மட்டும்)	...	1	25
கந்தக்கதம்பம் (பாடல்மட்டும்)	...	1	25

தபோவனப் பதிப்பகநூல்களும் அனுப்பஇயலும்.

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரைமீ முதல் பங்குனி முடிய வருடசந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி.பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருட சந்தா ரூ. 14. அனுப்பவும். வி. பி. இல்லை.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா 30 ஷில்லிங்குகள், போஸ்டல் ஆர்டராக அனுப்பலாம்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடுமாயின், சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்வம்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை-1.

இன்பக் கடலிற் புகுந்திடுவான்
இரவும் பகலும் தோற்றாமல்,
அன்பிற் கரைந்து கரைந்துருகி
அண்ணா! அரசே எனக்கூவிப்,
பின்புற் றழும்சேய் எனவிழிநீர்
பெருக்கிப் பெருக்கிப் பித்தாகித்,
துன்பக் கடல்விட் டகல்வேனோ?
சொரூபா நந்தச் சுடர்க்கொழுந்தே.

—தாயுமானார்

No.1506 அசோகா ASOKA நெ.1506

Regd No. M. 5390 சித்திரை மீ (1965 அமிர்தவசனி 17-1)

ஜவுளி என்றாலே

முன் நிற்பது
கருப்பண்ணா
ஸ்டோர்

ஆம். நீங்கள் சொல்லும் செல்லப் பெயர்.

பனாரஸ் காஞ்சீபுரம்

- பட்டு சேலை, சோளி
- டாவாடைகளுக்கு

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்கு தெரு, சென்னை-1.

தந்தி: கருப்பணாஸ் போன்: 34614

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY,
BESANT NAGAR, MADRAS-90.

குடை மார்க் பினாயில்
(சிறந்த கிருமி நாசினி)
தயாரிப்பாளரும், விநியோகஸ்தரும்:
ஸ்பிரிட் வேர் ஹவுஸ்
49, சைடன் ஹாம் ரோடு
சென்னை-3.
டெலிபோன்: 33982.

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:
பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைகிறபடியால், தயை கூர்ந்து வருகிற விசுவாவசு வருஷ சந்தாத் தொகையை அனுப்பும் படி ஞாபகப் படுத்துகிறோம். வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.
அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1. போன்: 22594

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.
Edited & Published by S. Muthuswami, 8, Bunder Street, Madras-1.